Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

**AXSHAYA CONSTRUCTION JAFFNA**

கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடு களைத் திருத்துதல், குளியலறை கட்டுதல்

Plumbing, Electrical, Painting

அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புக்கு: 0776679564

(C3690)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 16 வெள்ளிக்கிழமை (30.05.2014) பக்கங்கள் 20 ஓசை – 241


## வடக்கில் போக்குவரத்து சேவை மேலும் சீரமைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கில் பொது மக்களுக்கான போக்குவரத்து சேவைகளை மேலும் சீராக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக போக்கு வரத்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்து பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

இதன்போது பொதுமக்களுக்கான சேவைகளை உணர்ந்து கொண்டு அதை திறம்படவும் சிறப்பாகவும் முன்னெடுக்கும் போது அச்சேவை முழுமை பெறுகின்றது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற



வடமாகாண இலங்கை போக்குவரத்து சபைகளின் புதிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## பிரதேச சபையின் உபதலைவர் தமிழரசுக்கட்சியிலிருந்து நீக்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழரசுக்கட்சியில் இருந்து மானிப்பாய் பிரதேச சபையின் உபதலைவர் கே. கௌரிகாந்தன் நீக்கப்பட்டுள்ளதாக தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா கடிதம் அனுப்பியுள்ளார்.

கட்சியின் கொள்கை, கோட்பாடுகளுக்கு எதிராக செயற்பட்டு வந்ததுடன் மானிப்பாய் பிரதேச சபையின் வரவு செலவு திட்டத்தினை இரண்டு முறைகள் தோற்கடிக்க காரணமீகவும் அவர் இருந்தார்.

அதனடிப்படையில், கட்சியின் பொதுச் செயலாளரினால் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில், தேர்தல் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியதுடன், வடமாகாண அவைத்தலைவருக்கும் கடிதம் இது தொடர்பாக அனுப்பிவைதுள்ளார்.

இதேவேளை, பிரதேச சபையின் உபதலைவர் பதவியில் இருந்து நீக்கப்படுவதற்கான கடிதம் தேர்தல் திணைகளத்திற்கு அனுப்பிவைக்கப

(19) ஆம் பக்கம் பார்க்க

# விசேட தூதுவரை நியமிக்க நரேந்திரமோடி ஆலோசனை

## இலங்கை விவகாரத்தில் புதிய வியூகம்

(புதுடில்லி)

இலங்கை விவகாரத்தை கையாளும் விடயத்தில் இப்போது புதுடில்லி புதிய வியூகம் ஒன்றை வகுத்து வருகிறது.

இலங்கை விவகார்ங்களைத் தமது விசேட பிரதிநிதி மூலமாக நேரடியாகக் கையாள்வதற்கு விசேட பிரதிநிதி ஒருவரை நியமிக்கலாமா என்பது குறித்து புதிதாகப் பதவியேற்றிருக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆராய்ந்து வருகிறார் என புதுடில்லி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. வெளிவிவகார அமைச்சர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருக்கு அப்பால், தமது நேரடி வழிகாட்டலில் செயற்படக் கூடியவராக மூத்த இராஜதந்திரி ஒருவரை இப்பதவிக்கு நியமித்து இலங்கை விடயங்களை நேரடியாகக் கையாண்டால் என்ன என்பது குறித்து புதிய இந்தியப் பிரதமர் பரிசீலிக்கின்றாராம். எனினும், அத்தகைய தீர்மானம் ஒன்றை அவர் இறுதியாக முடிவு செய்வதற்கும் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும் இன்னும் ஒரு சில வாரங்கள் எடுக்கலாம் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. முன்னுரிமை அடிப்படையில் புதிய பிரதமர் விரைந்து கவனிக்க வேண்டிய விடயங்கள் பல இருக்கின்றன. அவை தொடர்பில்தான் அவரது சிரத்தைகள் இப்போது உள்ளன. அதற்காக, இலங்கை விவகாரத்தை அவர் புறக்கணிப்பார் என்று அர்த்தமல்ல. விசேடமாகக் கவனித்து, தந்திரமாகக்

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்திய உறவை நாம் மதிக்கிறோம் எமது பிரச்சினைக்கு நாமே தீர்வு காண்போம்



(கொழும்பு)

இந்தியாவின் நட்புறவை நாம் மதிக்கிறோம் ஆனால் எமது பிரச்சினையை நாமே தீர்த்துக்கொள்வோம் என்று அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் மிகவும் வலுவான மத்திய அரசொன்று காணப்படுகின்றது. அதனை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் மக்கள் அவையில் ஆளும் கட்சிக்கு பெரும்பான்மை கிடையாது. ஆகவே, மக்களவையில் ஏதேனும் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்புக்களைப் பெற வேண்டும். அதற்கு அப்பால் சென்று வெளிநாட்டு

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்திய அமைச்சர் சுஷ்மாவுக்கு ஜீ.எல். பீரிஸ் வாழ்த்து



நரேந்திர மோடி தலைமையிலான புதிய இந்திய அரசின் கீழ் இலங்கை - இந்திய உறவுகள் மேலும் வலுவடையும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். இந்தியாவின் புதிய வெளிவிவகார அமைச்சராக பொறுப்பேற்றுள்ள சுஷ்மா சுவராஜிக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

சுஷ்மா சுவராஜ் தனது இலங்கை விஜயத்தின் போது இலங்கை - இந்திய உறவுகள் தொடர்பில் அண்மைக் காலத்தில் புதிய உயிர்ப்பைக் கொடுத்ததாகவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். சுஷ்மா சுவராஜ் 2012 ஆம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## விபத்தில் சிக்கினர் போக்குவரத்து பொலிஸார்; மாணவி உட்பட மூவர் காயம்

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் இடம்பெற்ற விபத்தொன்றில் பாடசாலை மாணவி உட்பட இரு பொலிஸார் காயமடைந்தனர். நேற்று மதியம் 1.45 மணியளவில் கொக்குவில் ஆடியபாதம் வீதியில் இருந்து பாடசாலை மாணவியை ஏற்றி வந்த முச்சக்கரவண்டியொன்று காங்கேசன்துறை பிரதான வீதியால் யாழ்ப்பாணம் நோக்கி வேகமாகச் சென்ற போக்குவரத்து பொலிஸாரின் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இவ்விபத்து

(19) ஆம் பக்கம் பார்க்க

## மலேசியாவில் கைதானவர்களில் ஒருவர் வான்புலிகளின் பொறியியலாளர்

### விசாரணையில் புதிய தகவல்கள்

மலேசிய பயங்கரவாத தடுப்புப் பிரிவினால் கைது செய்யப்பட்டு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்ட குசாந்தன் மாஸ்டர் என்பவர், புலிகளின் விமானப் படையின் நிறுவுனரான சங்கரின் மைதுனர் என் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

குசாந்தன் மாஸ்டர், புலிகள் அமைப்புக்கு சொந்தமான விமானங்களை பயன்படுத்தி கொழும்பு, அநுராதபுரம் உள்ளிட்ட பிரதேசங்களில் விமானத் தாக்குதல்களை நடத்த நேரடியான பங்களிப்பை வழங்கியவர் என தெரியவந்துள்ளது.

பொறியியலாளரான அவர், புலிகளின் விமானப்படையில் பயன்படுத்தப்பட்ட ஸ்லின் ரக் விமானங்களை தாக்குதல் விமானங்களாக மாற்றும் பணிகளிலும் சிறிய ஹெலிகொப்டர்களை வடிவமைத்து அவற்றை பரீட்சித்துப் பார்க்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டமைக்கான தெளிவான சாட்சியங்கள் இருப்பதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவின் விசாரணை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

புலிகளின் விமானப் படைக்குரிய மிகவும் இரகசியமான

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ். மாநகரசபையில் நரேந்திரமோடிக்கு வாழ்த்து

இந்தியப் பிரதமராக பதவியேற்ற மோடிக்கு யாழ். மாநகர சபையில் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாநகரசபையின் 5ஆவது மாதாந்தக் கூட்டம் நேற்றுக் காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

இக் கூட்டத்தில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மோடிக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் ஊடகவியலாளர்களும் எழுந்து நின்று வாழ்த்து தெரிவிக்க சபையில் அனுமதி வழங்கப்பட்டது.

இதனையடுத்து ஊடகவியலாளர்களும் மோடிக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். (பா, 25)

உள்ளே
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் – I

# புத்தூரில் பொது இடங்களில் தேங்கும் கழிவுப்பொருட்கள்

(அச்சுவேலி)

புத்தூர் பகுதி, சந்தை மற்றும் பொது இடங்களில் கழிவுப்பொருட்கள் காணப் படுவதாக அப்பகுதி பொதுமக்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தூர் பிரதேச சபைக் கழிவகற்றும் பகுதியினரின் அக்கறையின்மையே கார ணம் எனவும் இதனால் சுகாதாரமற்ற நிலை காணப்படுவதாகவும் நோய்கள் பரவும் அபாயநிலை தோன்றியுள்ளதாக வும் அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக் கின்றனர்.

எனவே குறித்த பகுதியில் கழிவுகளை அகற்றி மக்களின் சுகாதாரமான வாழ்க் கைக்கு வழி ஏற்படுத்துமாறு உரிய தரப்பி னரை மக்கள் கேட்டுள்ளனர். (85)

## நியமனக் கடிதங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையில் இன்று 60 சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் 2 நூலகர்களுக்குமான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவிருப்பதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குண ராசா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மாதாந்தக் கூட் டத்திலேயே முதல்வரினால் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று பி.ப. 4.00 மணிக்கு யாழ். மாநகர மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெறவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள் ளது. (பா,25)

## முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சியும்

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச செயலக பிரிவில் மண்டைதீவு தெற்கு ஜே/09 கிராம உத்தி யோகத்தர் பிரிவில் மட்டும் இன்று பி.ப. 3.00 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக் கிணங்க முன்னெச்சரிக்கை விழிப்புணர் வும் ஒத்திகைப் பயிற்சி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பில் பொதுமக்கள் அமை தியாக இருக்குமாறும், இது ஒரு ஒத்தி கைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொதுமக்களுக்கு யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

## ஆலயத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

குருநகர் புனித வேளாங்கண்ணி மாதா ஆலய வருடாந்த ஆலயத் திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு பங்குத்தந்தை ஆர்.நேசராசா வினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட வுள்ளது.

நற்கருணை வழிபாடு 1.06.2014 ஞாயிறு மாலை 5.30 மணிக்கு அருளுரையும், நற் கருணை ஆசீர்வாதமும் நடைபெறும்.

வெளியூர்களிலிருந்து வரும் பக்தர்க ளின் வசதிக்காக ஒழுங்குகள் செய்யப்பட் டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித் துள்ளனர். (27)

## ஒன்றுகூடல் நிகழ்வு

(யாழ். நிருபர்)

கோண்டாவில் இந்து மகாவித்தியாலய உயர்தர மாணவர் மன்றம் நடத்தும் வருடாந்த ஒன்றுகூடலும் மதியபோசன விருந்தும் நாளை மு.ப. 9.30 மணிக்கு வி.ஜிந்துஷன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார் பிரதம விருந்தினராக கலந்துகொள்கிறார்.

கல்லூரி அதிபர் கே.தவகீஸ்வரன், உயர்தர மாணவர் மன்ற பொறுப்பாசிரியர் திருமதி சு.கிருஷ்ண ராஜா ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். (10)


**சிறுவிளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக்**

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித் தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3376)



**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2532 திகதி 28-05-2014

ஆங்கில எழுத்து: G

வெற்றி எண்கள்: 18 33 43 52

போனஸ் இல: 55

ஜக்பொட் பரிசு ரூ.**17,378,800/-** வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 229083 | 20/- | 4,581,660/- |
| 2 இல | 16421 | 100/- | 1,642,100/- |
| 3 இல | 328 | 1,000/- | 328,000/- |
| 4 இல | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9295 | 40/- | 371,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 668 | 1,000/- | 668,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 17,378,800/- | - |
| 1 இல + போனஸ் இல | 10851 | 100/- | 1,085,100/- |
| 2 இல + போனஸ் இல | 519 | 500/- | 259,500/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 422 | 200/- | 84,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 18 | 1,500/- | 27,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 267624 | | 10,857,560/- |


பச்சை நிற டிக்கட்டுகள் 2014.05.31 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 18,004,175/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7.

C/3674

அன்புளநீர் அகமெல்லாம் பொங்கப் பொங்க அறமெழுந்து
பெருஞ்சேவை ஆற்ற ஆற்றத்
தொண்டு செயப்பல அன்பர் தோன்றத் தோன்றத் தோற்று
சுவைச் சோறாக உண்ண
உண்ணக் கண்டுவரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப கடி
அமுதசுரபியினாள் ஊட்ட ஊட்ட
கொண்டு பசி தீர்த்தவர்கள் கோடி கோடி கோடானு
காலமெல்லாம் வாழி வாழி.

## நயினாதீவு - ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

**Regd. No. S.236**

**ஆரம்பம் - 1960 (வரைவுள்ளது)**

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை அமுதசுரபி என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 55 ஆவது ஆண்டில் பிரவேசிப்பதில் மனமகிழ்வெய்துகிறோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தருமசீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம் பொருள் உதவி செய்து வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச்சேவையை சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும், அமுதசுரபி மண்டபத்திற்கு வந்து பணிசெய்யும் அடியார்களுக்கும், தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும், அன்னதான தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்புற நடைபெற பணம், பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தருமசீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்து சபையின் மனமுவந்த பணிவார்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜய ஆண்டு ஆனி 14 ஆம் நாள் 28.06.2014 சனிக்கிழமை அம்பாளின் மகோற்சவம் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி ஆனித்திங்கள் 23 ஆம் நாள் 07.07.2014 திங்கட்கிழமை மஞ்சத் திருவிழாவும், ஆனித்திங்கள் 26 ஆம் நாள் 10.07.2014 வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும், ஆனித்திங்கள் 27 ஆம் நாள் 11.07.2014 வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், ஆனித்திங்கள் 28 ஆம் நாள் 12.07.2014 சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், ஆனித்திங்கள் 29 ஆம் நாள் 13.07.2014 ஞாயிற்றுக்கிழமை தெப்பத்திருவிழாவும் நடைபெறவிருப்பதால் அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் பதினாறு (16) நாட்களும் இரவும் பகலும் அன்னதானம் வழங்க சபை தீர்மானம் செய்துள்ளது. ஆகவே தருமசீலர்களாகிய தங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப்பட்ட தொண்டர்கள் வருவார்கள். அவர்களிடம் வழமைபோல நீங்கள் உதவும் பணம், பொருள் முதலியவற்றைக் கொடுத்து சபையின் பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நேரடியாக பணம் கொடுக்க விரும்புவோர் **Amuthasurabhi, Commercial Bank,** கண. இல 1247985001 **Peoples Park** கட்டடம், **Pettah**, அல்லது **B.O.C** க்கு இல 7687836, ஊர்காவற்றுறை கிளை, வேலணை என்னும் விலாசத்திற்கு அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். பணம், பொருள் என்பவற்றை வழங்குவதாயின் திரு சி.சிவகுமார், வெற்றிலை மார்க்கட், யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும் ஒப்படைக்கலாம் என்பதையும் தெரிவிக்கின்றோம். திருநெல்வேலி தேனு களஞ்சியத் (மாக்கற் உட்புறம்)திலும் பொருள், பணம் வழங்கலாம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

அம்பிகையின் திருப்பதியிலே அடியார்கள் தங்கி நின்று தரிசிப்பதற்கான நவீன வசதிகளுடன்கூடிய அமுதசுரபி அன்னபூரணி இறைபணிகள் இல்லம் அமைக்கப் பெற்றுள்ளதென்பதை மனமகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

"மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை
அமுது செய்வித்தல்"

**அமுதசுரபி மண்டபம்,**
**நயினாதீவு - 02**

**ம.அம்பிகைபாகன்,**
**செயலாளர்.**

(C/3695)

# ஓவியம் வரையும் ஆற்றலை வளர்க்க கண்காட்சிகள் பெரிதும் உதவுகின்றன

## நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

மாணவர்களின் ஓவியம் வரையும் ஆற்றலை வளர்ப்பதற்கு ஓவியக் கண்காட்சிகள் பெரிதும் உதவுகின்றன. இக்கண்காட்சி மூலம் மாணவரிடையே அறிமுறை சார்ந்த அறிவை விட செயற்பாட்டு ரீதியான அறிவு மேலோங்கியிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.


கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியைத் திறந்துவைத்து கருத்துரை வழங்கிய நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அ.அகிலதாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்தோதய விஞ்ஞான தொழில்நுட்ப மண்டபத்தில் சித்திரபாட ஆசிரியர் கீதப்பிரியன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு தரம் 6 தொடக்கம் 13 வரை சித்திரபாட மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றைத் தயாரித்த மாணவர்கள் பாராட்டப்பட வேண்டியவராவார்.

இங்கு காட்சிப்படுத்தப்பட்ட ஓவியங்களில் வரைபுத்திறன், வர்ணம் பூசும் திறன் என்பன ஒழுங்காக செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் மாணவர்களின் கலைத்திறன்களையும் செயற்படுத்த முடியும்.

இக்கண்காட்சியின் ஊடாக ஆசிரியரின் செயற்றிறனையும், மாணவர்களின் செயற்பாட்டுத் திறனையும் வேறுபடுத்தி அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது என்றார். (10)



சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியபோது... (48)

# வாக்காளர் தின ஒன்றுகூடலும் விழிப்பூட்டல் ஊர்வலமும்

(யாழ்ப்பாணம்)

"குடிமக்கள் உரிமையைப் பாதுகாப்போம்" என்னும் தொனிப்பொருளில் இன்று காலை 9 மணிக்கு வாக்காளர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபரும் பதியும் அலுவலருமான சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வு காலை 9 மணிக்கு மாவட்ட செயலக முன்றலில் ஒன்று கூடலுடன் ஆரம்பமாகி செயலக நுழைவாயிலில் பதாகைகள் கட்டும் நிகழ்வும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து காலை 9.30 மணிக்கு யாழ்.பிரதான தபாலக முன்றலில் இருந்து வாக்காளர் தின விழிப்பூட்டலுக்காக ஊர்வலமாக செல்லப்படும். இந்த ஊர்வலமானது பிரதான தபாலக அலுவலகத்தின் முன்றலில் இருந்து காங்கேசன் துறை வீதி வழியாக, சத்திரச் சந்திவரை சென்று வைத்தியசாலை வீதி வழியாக பிர-தான பஸ் நிலையத்துக்குச் சென்று பதாகை கட்டுதல் நிகழ்வும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து வேம்படிச் சந்திவரை ஊர்வலமாக செல்லப்படும் என யாழ்.மாவட்ட உதவித்தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# தேசிய மின் மற்றும் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ வாரத்தின் ஆரம்ப நிகழ்வு



கிளிநொச்சியில் தேசிய மின் மற்றும் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ வாரத்தின் முதலாவது நிகழ்வு நேற்று முன்தினம் புதன் கிழமை காலை நடைபெற்றது.

இந்த வாரத்தை யொட்டி கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் அகற்றிய இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் நடவடிக்கை கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் ஆரம்பமாகியது. கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகிய "தேசிய மின் மற்றும் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ வாரம்" எதிர்வரும் 2 ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்படும்.

இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கைக்காக, நிறுவனங்களோ, பொதுமக்களோ இலத்திரனியல் கழிவுகளை கொண்டுவந்து ஒப்படைக்கமுடியும்.

இவ்வாறே கரைதுறைப்பற்று பிரதேசபை வளாகத்தில் நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவிலுள்ள நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் தங்களது இலத்திரனியல் கழிவுகளை ஒப்படைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. (90)

# தமிழர்கள் புளுகித் தலையில் வைக்கும் புலுடா ராமசாமிகள்...




பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குப் போகமாட்டோம் எண்டு சில நாட்களுக்கு முதல் செல்வம் அடைக்கலநாதன் சொன்னதைப் பற்றி இந்தப் பக்கத்தில எழுதினதைப் பார்த்திட்டுச் சில தேசியவாதிகள், **'செல்வத்தார் சொன்னதில என்ன பிழை? தெரிவுக்குழுவைப் புறக்கணிக்கிற கூட்டமைப்பின்ரை முடிவை நாங்கள் ஆதரிக்கிறம். ஏமாற்றுகிற நோக்கத்தோட இருக்கிற அரசாங்கத்தை அம்பலப்படுத்த வேணுமே தவிர, அதைப் பாதுகாக்கேலாது'** எண்டு என்னோட சண்டைக்கே வந்திட்டினம்.

போதாக்குறைக்கு அதில ஒரு ஒண்ணாம் நம்பர் தேசியவாதி சொன்னார், **'வெண்ணை திரண்டு வாற நேரத்தில இந்த மாதிரியெல்லாம் எழுதி தாழியை உடைக்காதையுங்கோ'** எண்டு கொஞ்சம் காட்டமாகவும் சொன்னார்.

எனக்கெண்டால் திகைப்பு ஒரு பக்கம். சிரிப்பு ஒரு பக்கம். கவலை ஒரு பக்கம் எண்டு ஒரு மசாலா உணர்ச்சி வந்து என்ன செய்யிறது எண்டே தெரியேல்ல.

எனக்கு மட்டுமில்ல, விசயம் விளங்கின ஆருக்கும் இந்தக் கதைகளைக் கேட்க இந்த மாதிரி மசாலா உணர்ச்சி வந்துதான் தீரும்.

**'சரி, தெரிவுக்குழுவுக்குப் போகவேண்டாம், தெரிவுக்குழுவுக்கு வெளியில நிண்டு கொண்டு அப்பிடி ஒரு தீர்வு யோசினையை வைக்கலாமே! அப்பிடி ஒரு யோசினையை வைச்சுத் தெரிவுக்குழுவை மடக்கலாமல்லோ! அப்பிடி வைக்கக்கூடிய 'தில்' கூட்டமைப்பிட்ட இருக்கா?'** எண்டு கேட்டன்.

அப்பிடியே இன்னொண்டையும் கேட்டேன், **'வெண்ணை திரண்டு வாற நேரம் எண்டு சொல்லிறியள். அப்பிடியெண்டால் என்ன தீர்வு வரப்போகுதெண்டா சொல்லிறியள்? இல்லாட்டி கூரையைப் பிய்ச்சுக் கொண்டு ஆரோ எல்லாத்தையும் கொண்டு வந்து கொட்டப்போறாங்களா? இப்பிடித்தானே எப்ப பார்த்தாலும் இந்தியா வருது, அமெரிக்கா வருது, ஐ.நா வருது, சர்வதேச சமூகம், நவநீதம்பிள்ளை அம்மா வாறா, அப்பு வாறார் எண்டு இந்த வெண்ணை திரண்டு வாற கதையைச்சொல்லிக் கொண்டேயிருக்கிறியள்'** எண்டு.

ஆட்க்ள் வாய் திறக்கவேயில்லை.

**இந்தப் புலுடா ராமசாமிகள்** எங்களை என்னெண்டுதான் நினைக்கிறாங்கள்?

கொஞ்சம் மரியாதை குடுத்துப் பேசாமல் இருந்தால், தலையில எண்ணையை விட்டு திரியைப்போட்டுக் கொளுத்தியும் விடுவாங்கள்.

இப்பழத் தாங்களும் ஏமாந்து சனங்களையும் ஏமாளிகளாக்கியே கூட்டமைப்பின்ரை ஆதரவாளர்கள் பேய்த்தனமான கனவுகளை எல்லாம் கண்டு கொண்டிருக்கிறார்கள்.

**சனங்களின்ரை காதில பூ வைக்கிறதுக்கெண்டு இவங்களுக்கு எப்பிழயோ சரக்குக் கிடைச்சிடும்.**

கொஞ்ச நாளைக்கு ஜெனிவா... பிறகு கொஞ்ச நாளைக்கு... மே 18..... பிறகு கார்த்திகை 26, 27 மாவீரர் நாள்...

இதைப்பற்றி சோக்கான ஒரு கட்டுரையை **'சீசன் போராளிகள்'** எண்டு போஸ் நிஹாலே எண்டொருத்தர் எழுதியிருக்கிறார். பழச்சுப் பாருங்கோ. தேசிய நழகர்களுக்கு நல்லதொரு விளாசல்.

இந்த மாதிரி தமிழர்களைத் தமிழர்களே ஏமாத்திறதைக் கண்டு பொறுக்கேலாமத் தானே இயக்கப்பெழயள் அந்த நாளையில தமிழ்த்தலைவர்களையும் போட்டுத் தள்ளினவங்கள்!

ரட்டைக்குழல் துவக்கால போட்டுத்தள்ளிற மாதிரி ஒரு குழலால தமிழ்த்தலைகளையும் இன்னொண்டால சிங்களத் தலைகளையும் உருட்டினாங்கள்.

அப்பாவிச் சனங்களை ஏமாத்தினால் அதில தமிழ் – சிங்களம் – முஸ்லிம் – வெள்ளை – கறுப்பு எண்டெல்லாம் வித்தியாசம் கிடையாது.

ஆரெல்லாம் சனத்தை ஏமாத்திச் சுத்து மாத்துச் செய்யிறானோ அவனெல்லாம் துரோகியே எண்டுதான் வரலாறு சொல்லுது.

தமிழ்ச் சனத்தை ஏமாத்து ஏமாத்தெண்டு ஏமாத்துகிற இந்தத் தமிழ்த்தலைமைகளில இருந்து கடவுள்தான் காப்பாற்ற வேணும் எண்டு அப்பவே தமிழரசுக் கட்சியின்ரை தலைவர் செல்வநாயகமே சொல்லீட்டார்.

அவர் சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்.

தமிழர்களைத் தமிழர்களிடமிருந்துதான் முதல்ல காப்பாற்ற வேணும். ஏனெண்டால் தமிழர்களைத் தமிழர்கள்தான் கடுமையாக ஏமாத்துகிறார்கள்.

சொந்தச் சனத்துக்கே பொய்யும் புரட்டும் சொல்லி ஏமாத்துகிற தலைவர்கள் எப்பிழயான ஆட்கள் எண்டால், பெத்த பிள்ளைக்கே பொய்சொல்லிற அப்பன்மாரை – அம்மாமாரைப் போன்றவர்கள்.

அப்பழயான தந்தையர்களும் தாயர்களும் உருப்பட்டதில்லை. அவர்களின் வளர்ப்பில் வளரும் பிள்ளைகளும் உருப்பட்டதாக இருக்காது.

ஆனால், தமிழ் மக்கள் எப்பவும் பொய்யர்களையும் ஏமாத்துக்காரரையும் சுயநலமிகளையுமே தங்களின் தலைவர்களாகவும் தங்கள் தலைவிதியை எழுதுகிறவர்களாகவும் தெரிவு செய்து கொண்டிருக்கினம்.

இப்பழயே செய்த கொண்டிருந்தால் 'இந்தச் சமூகம் உருப்பட்ட மாதிரித்தான்.

செல்வம் அண்ணை' மட்டுமல்ல, அவரோட கூட இருக்கிற அத்தினை பேருக்கும் சொல்லிறன், இந்தப் பேய்ச்சனங்கள் இருக்குமட்டும் உங்கட காட்டில மழைதான் அண்ணை...

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே. -மாத்யூஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வரவேற்புகளும் மகிழ்ச்சிகளும்!

இலங்கை விடயத்தில் மோடி அரசின் உறுதியான நிலைப்பாடு வரவேற்கத்தக்கது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பியான எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் தெரிவித்துள்ளார். வழக்கம்போல, கூட்டமைப்பு இந்த வரவேற்பையடுத்து அதை வெற்றிகரமாக்க, என்ன அரசியல் நடவடிக்கைகளில் இறங்கவிருக்கிறது என்பதை திரு. சுமந்திரன் சொல்லவில்லை.

காலத்துக்குக் காலம் சில பல உலகத் தலைவர்களின் நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது வரவேற்றுப் பாராட்டுத் தெரிவித்து அவ்வப்போது மகிழ்ந்து வருவது நாமறிந்ததே. மாதங்களும் மாற மாற கூட்டமைப்பின் பாராட்டைப் பெறும் உலகத் தலைவர்களும் மாறி வருகிறார்களே தவிர, நமது நிலைமை ஒன்றும் மாறியதாய்க் காணோம்.

இதோ, இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் ஜெனிவாவில் ஒபாமாவின் அரசு கொண்டுவந்த பிரேரணையை வரவேற்று தமிழர்கள் எல்லோரும் மகிழும்படி கேட்டிருந்தார்கள். எங்களுக்கும் மகிழ்வதற்கு வேறு சந்தர்ப்பங்கள் ஏது? எனவே அவர்கள் கேட்டுக் கொண்டபடி தாராளமாகவே மகிழ்ந்திருந்தோம்.

அதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு, “இலங்கையில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் மாநாட்டிற்கு மன்மோகன் சிங் வரப் போவதில்லை எனத் தெரிவித்துவிட்டார்; இந்தியப் பிரதமரின் இந்த முடிவு வரவேற்கத்தக்கது; தமிழ் மக்களுக்கு இது மகிழ்ச்சியான செய்தி” என்று ததேகூவினர் அறிவித்தார்கள். விடுவமா நாங்கள்? வெறுமனே மகிழ்ந்தோமில்லை, மகிழ்ச்சிக்கடலில் மிதந்தோம்.

ஏனெனில், நமதிந்த வாழ்வில் மாற்றம் எப்படா வரும் என்று ஏங்கியிருக்கும் நமக்கு, அதே மாதத்திலேயே இரட்டிப்பு மகிழ்ச்சி தந்தார்கள் தலைவர்கள்! இங்கிலாந்துப் பிரதமர் டேவிட் கமரூனை யாழ்ப்பாணம் கூட்டிவந்து, முதலில் பாட்டாவுக்கும் பின்னர் பாடசாலைக்கும் செல்லவேண்டும் என்பதுபோல, முதலில் கூட்டமைப்பின் பிரச்சார இடிமுழக்கப் பத்திரிகை அலுவலகத்தையும், பின்னர் சுன்னாகம் நலன்புரி முகாமையும் காட்டி அனுப்பினார்கள்.

யாழ் பொதுநூலக பல்கனியில் இங்கிலாந்துப் பிரதமருடன் தலைவர்கள் மக்களுக்கு சிலநிமிட நேரக் காட்சி தந்ததோடு, நலன்புரி முகாம் ‘விசிற்’றில், கமரூனுக்கு இரண்டடி பின்னால் இதே திரு. சுமந்திரன் அவர்கள் விரைந்து நடந்த காட்சியை “என்னே ஒரு விசுவாசம்!” என்று வீடியோவில் பார்த்துக் களித்தோம்.

அந்த மாதமும் அதற்கடுத்த மாதமும் இங்கிலாந்துப் பிரதமரின் நிலைப்பாடுகளை வரவேற்று மகிழ்வதைத் தமிழர்கள் ஒருதுளியும் தவறவிட்டுவிடக் கூடாது என்பதில் நம் தலைவர்களும் ஊடகங்களும் பலத்த கரிசனையோடிருந்தார்கள். உலகத் தலைவர்களின் வரவேற்கத்தக்க நிலைப்பாடுகள் வரும்போதெல்லாம் உடனுக்குடன் மகிழ்ந்துவிடப் பழக்கமாகியிருந்த நாங்கள், அப்போதும் பூரிக்கத் தவறவில்லை.

இப்படியே உலகத் தலைவர்களின் நிலைப்பாடுகளை இந்தத் தலைவர்கள் வரவேற்க வரவேற்க நாங்களும் மகிழ்ந்துதான் வருகிறோம். இப்போது வரவேற்புக்குள்ளாகியிருக்கும் மோடியின் நிலைப்பாடு எதுவென்று பார்த்தால்....

“13வது அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்தி அதற்கப்பால் சென்று அதிகாரப்பகிர்வை அர்த்தமுள்ளதாக்கும்படியாக முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் கேட்டுக்கொண்டதையே நானும் உங்களிடம் வலியுறுத்துகிறேன்” என்று பிரதமர் மோடி, இலங்கை ஜனாதிபதியிடம் சொல்லியிருப்பதுதான்.

அடங் கொக்க மக்கா...! கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கும் மேலாக இந்தியா இதைத்தானே சொல்லிவருகிறது? ததேகூவினரான நீங்கள் கேட்டீர்களா? பேசினீர்களா? பெற்ற 13ஐ அமுல்படுத்தினீர்களா? என்பதல்லவா கேள்வி!

எங்கயும் எதையும் அரக்காமல் இருந்தஇடத்தில் எல்லா நிலைப்பாடுகளையும் வரவேற்றுக் கொண்டிருக்கிறீர்கள்; நாங்களும் மகிழ்ந்து கொண்டிருக்கிறோம்.... வேறென்ன? - ஆசிரியர்.

---

-க.பொ.த.(சா/த) மாணவர்களின்-

# அடையாளஅட்டை விண்ணப்பங்களை

# விரைவாக அனுப்புமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

க.பொ.த(சா/த)பரீட்சைக்கு தோற்றவுள்ள சுமார நான்கு இலட்சம் பாடசாலை மாணவர்களில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் மாணவர்களின் அடை யாள அட்டைக்கான விண்ணப் பங்களே இதுவரை கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் ஜி. ஏ. ஆர். தேவப்பிரிய தெரிவித்தார்.

நாளை 31 ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளதால் அசௌகரியங்களை தவிர்க்கும் வகையில் எஞ்சியுள்ள மாணவர்களின் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களை கேட்டுக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சு, கல்வி திணைக்கள அதிகாரிகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பாடசாலை அதிபர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஏற்கனவே கடிதம் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார.

பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலை மாணவர்களின் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் கடைசி நேரத்தில் கிடைக்கப் பெறுவதினால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. கடந்த கால அனுபவங்களை கருத்திற் கொண்டே இம்முறை நேரகாலத்துடன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம். எனினும். இதுவரை ஒரு இலட்சத்து 25 ஆயிரம் விண்ணப்பங்களே கிடைக்கப் பெற்றுள்ளன.

தேவையை கருத்திற் கொண்டு ஒக்ரோபர் வரை வழங்கலாம் என்றாலும், கால தாமதம் மற்றும் அசௌகரியங்களை தவிர்க்கும் வகையிலேயே நேர காலத்துடன் கோரப்படுகிறது.

அதேபோன்று விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிக்கு 16 வயது பூர்த்தியாகும் மாதங்கள் அடிப்படையில் தனித்தனியாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் கோருகின்றோம். அப்போது மிகவும் இலகுவாக தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்க முடியும் என்றார்.

# இணைசுகாதார மாணவர்களின் சத்தியாக்கிரக போர் தொடரும்

தமது சத்தியாக்கிரக போராட்டத்தினை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாக இணை சுகாதார பீட மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

4 வருடகால இணை சுகாதார பட்டப்படிப்பினை முடக்க வேண்டாமென அதிகாரிகளிடம் முன்வைத்த கோரிக்கைக்கு இதுவரை உரிய பதில கிடைக்கவில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கமைய, கொழும்பு கோட்டை உள்ளிட்ட 4 இடங்களில் ஆரம்பித்துள்ள சத்தியா கிரக போராட்டத்தினை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத் தின் இணை சுகாதார பீடத்தின் மாணவர் சங்கத்தின் தலைவர் ரஜித்த பிரசாத் கூறினார்.

பேராதனை, கொழும்பு, ஶ்ரீஜயவர்த்தனபுர, ருகுணு, யாழ்ப்பாணம், கிழக்கு பல் கலைக்கழக ஆகியவற்றின் இணை சுகாதார பீட மாணவர்கள் 159 நாட்களாக வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்கள் சித்தியடையத் தவறியதாக கருதப்படுவார்கள் என பேராதனை பல்கலைக்கழக அதி காரிகள் குறிப்பிடுகின்றனர்.

எவ்வாறாயினும், இணை சுகாதார பீடத்தில் நான்கு வருடகால பட்டப்படிப்பினை பல்கலைக் கழகங்களில் மீள ஆரம்பிக்கும் வரையில், எந்தவொரு பரீட்சைகளிலும் கலந்துகொள்ளப் போவதில்லை என மாணவர் சங்கத்தின் தலைவர் ரஜித்த பிரசாத் கூறினார்.

# தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களை வெளியேற்றுமா சுவிஸ்அரசு?

சுவிட்சர்லாந்தில் தஞ்சக் கோரிக்கை தோல்வியடைந்தவர்களை இலங்கைக்குத் திருப்பியனுப்பும் நடவடிக்கையில் நிலவிய தற்காலிகத் தடை நீக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இலங்கையிலிருந்து வந்து தஞ்சம் கோரி தோல்வியடைந்தவர்கள் தொடர்பான தகவல்களை ஆராய்ந்துவருவதாக மத்திய அரசின் குடியேறிகளுக்கான அலுவலகத்தின் பேச்சாளர் சிலீன் கோல்ப்ராத் பி.பி.சி. சிங்கள சேவையிடம் தெரிவித்தார்.

ஆனாலும், திருப்பி அனுப்பப்படுவதற்கு இருந்த தற்காலிகத் தடை நீக்கப்பட்டதன் மூலம், தஞ்சக் கோரிக்கை தோல்வியடைந்த எல்லோருமே இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று கருத முடியாது என்றும் சிலீன் கோல்ப்ராத் கூறினார்.

இலங்கையின் நிலைமைகள் குறித்து தாங்கள் அறிந்திருப்பதாகவும் தமக்கும் கவலைகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, சுவிட்சர்லாந்தில் இலங்கைத் தஞ்சக் கோரிக்கையாளர்கள் சுமார் 2000 பேர் வரையில் இருப்பதாக ஜெனிவாவிலுள்ள இலங்கை ஊடகவியலாளரும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான சுனந்த தேசப்பிரிய பி.பி.சி.யிடம் கூறினார்.

இலங்கையின் மனித உரிமை நிலைவரங்களை விமர்சித்துவருகின்ற சுவிட்சர்லாந்து அரசு, தோல்வியடைந்த தஞ்சக் கோரிக்கையாளர்களை அங்கு திருப்பியனுப்புவது என்பது முரண்பாடான செயற்பாடு என்றும் சுனந்த சுட்டிக்காட்டினார்.

ஆனால், சுவிட்சர்லாந்தில் அதிகரித்துவரும் வெளிநாட்டுக் குடியேறிகள் காரணமாக உள்ளூர் மக்கள் மத்தியில் பெருமளவு எதிர்ப்புகள் கிளம்பி வருகின்றமையாலேயே தோல்வியடைந்த தஞ்சக் கோரிக்கையாளர்களை திருப்பியனுப்பும் முடிவுக்கு அரசு தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மரணச்சடங்கை சாதகமாக்கி தங்கச்சங்கிலி அபகரிப்பு

(வடமராட்சி)


மரணச்சடங்கை சாதகமாக பயன்படுத்தி வீட்டில் தனியாகவிருந்த வயோதிப மாதுவின் தலையில் தாக்கிவிட்டு கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துக்கொண்டு சென்ற சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3.30மணியளவில் பொலிகண்டி மேற்கில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் பொலிகண்டி மேற்கு ஏ.யி.ஏ லேனைச்சேர்ந்த சோமசுந்தரம் இராஜேஸ்வரி (வயது-87) என்ற வயோதிபமாதுவே இவ்வாறு தாக்கப்பட்டு வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாதுவின் வீட்டிலிருந்து சுமார் 150 மீற்றர் தூரத்தில் மரணச்சடங்கு இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இதனால் வீட்டிலுள்ள ஏனையவர்கள் சென்றுள்ளபோதிலும் குறித்த மாது தன்னந்தனியே வீட்டில் படுத்துறங்கிக் கொண்டிருந்தார். இவற்றைச்சாதகமாகப்பயன் படுத்திய திருடன் வீட்டின் பின்கதவால் வந்து படுத்துறங்கிக்கொண்டிருந்த வயோதிபமாதுவின் தலையில் கடுமையாகத் தாக்கிவிட்டு கழுத்தில் அணிந்திருந்த 4 பவுண் தங்கச்சங்கிலியையும் அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளான். தலையில் படுகாயமடைந்த வயோதிபமாதுவை அயலவர்கள் உடனடியாக வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டுசென்று அனுமதித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(116)

# மாகாணசபைகளை ஆற்றலுள்ளவைகளாக ஆக்குவதற்கு ஏதாவது வழியுண்டா!



அ. வரதராஜப்பெருமாள்

> **வடக்கு மாகாணசபை வெறுமனே தமிழ்த் தேச சுயநிர்ணய அரசியற் களமாக மட்டும் தான் இருக்க வேண்டுமென்றால், திரு விக்கினேஸ்வரன் போன்ற ஒருவரை தமிழர்கள் முதலமைச்சராக ஆக்கியிருக்க வேண்டிய அவசியமில்லையே! இவரை விட அதனை திரு மாவை சேனாதிராஜாவையோ அல்லது கௌரவ அடைக்கலநாதன் செல்வத்தையோ அல்லது கௌரவ சுரேஷ் பிரேமச்சந்திரனையோ முதலமைச்சர் ஆக்கியிருந்தால் மிகத் திறமையாக ஆக்ரோஷம் கொப்பளிக்கும் களமாக மாகாண சபையை எப்போதும் சுடச்சுட வைத்துக் கொண்டிருப்பார்களே! எல்லோரையும் விட, சிவாஜிலிங்கமும், அனந்தியும் மாகாண சபையை முள்ளிவாய்க்காலில் நடத்தி எப்போதும் அதனை ஒரு சுடுகாட்டுக் கொதிநிலையிலேயே வைத்திருந்திருப்பார்களே!**

தமிழ்த் தேசம், தமிழ்த் தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற சுலோகங்களை இது ஊருக்கடி பெண்ணே! உனக்கல்லடி கண்ணே! என்ற கணக்கில் தமிழர்கள் மத்தியில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களிற் கணிசமானோர் ஒரு மகா தமிழ் உணர்ச்சி அரசியலை நடத்தி வருவதை நாம் நாளும் பொழுதும் காண்கின்றோம்.

அவ்வாறிருந்தாலும், தமிழர்கள் மத்தியில் பெரும் மதிப்புக்கு உரியவரும் யாழ்ப்பாணத் தமிழர்களின் பெருந்தொகையான விருப்பு வாக்குகளைப் பெற்றவருமான கௌரவ முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்கள் அப்படிப்பட்டவரல்ல என்பது புரிந்து கொள்ளப்படக் கூடிய ஒன்றே!

இலங்கையின் நீதிமன்றங்களில் நீதிபதியாக இருந்த முப்பது ஆண்டு கால கட்டத்தில் அவர் எந்தக் கட்டத்திலும் தமிழ்த் தேசம், தமிழ்த் தேசியத்துக்காக உணர்ச்சிவசப்பட்டது கிடையாது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. அப்படிப்பட்டவருக்கு எழுபத்தைந்து வயதில் அவற்றுக்காக உணர்ச்சி வசப்பட்டு நிற்கிறார் என்றால் அது நம்பக் கூடிய ஒன்றல்ல.

எட்டுக் கிரகங்களும் கூடி வந்தாலும் சனியின் கண்பட்டால் நாசம் என்பார்கள். கம்பராமாயணம் சிவபுராணம் என்று இருந்த திரு விக்கினேஸ்வரனுக்கு சம்பந்தரின் கண்பட்டதால் அவரின் ஜாதகம் சுக்கிரதிசையில் ஏறியது. திரு சேனாதிராஜாவுக்கு அதுவே ஏழரைச் சனியனாகியது.

எவ்வாறாயினும் திரு விக்கினேஸ்வரன் அவர்கள் அரசியலிற் புகுந்த அடுத்த கணத்திலேயே அவர் இலங்கைத் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகினார். வயதால் அனுபவசாலி, சட்டத்தில் மேதாவி, நிர்வாகத்தில் நிபுணன், அரசைப்பற்றி அத்துபடியாக அறிந்தவர், கடவுள் நம்பிக்கைகளால் பண்பானவர், கறையற்றவர், குறையற்றவர் என்ற பல்வேறு சான்றிதழ்களால் தமிழ்ப் பிரமுகர் சமூகத்தில் எடுத்த எடுப்பிலேயே அவர் தலைவராக அங்கீகரிக்கப்பட்டார்.

திரு விக்கினேஸ்வரன் அவர்கள் பற்றி அவரவர் தமது அளவில் உயர் வாகக் கருதிய அதேவேளை இலங்கை (யாழ்ப்பாண)த் தமிழர்கள் அவருக்கு 50 சதவீதமான விருப்பு வாக்குகளை அளித்து அவரை எந்த சந்தேகமுமற்ற ஒரு சட்டபூர்வமான நியாயாதிக்கம் உடைய தலைவராக அங்கீகரித்தார்கள்.

தமிழர்கள் தமது பூரணமான நம்பிக்கையையும் அவரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அதன் மூலம் அவர் தமிழர்களின் உடனடியான பொதுத் தேவைகள் மற்றும் தமிழர்களின் நீண்டகால அபிலாஷைகளை நடைமுறை யதார்த்தமாக்குவதற்கு வேண்டிய சரியான முடிவுகளை எடுத்துச் செயற்படுவார் - யாருக்கும் அஞ்சாது சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுத்துச் செயற்பட வேண்டும் என்பதே பரந்துபட்ட தமிழர்களின் எதிர்பார்க்கை. அதற்கான மக்களாணையையும் அவருக்கு வழங்கியிருக்கிறார்கள்.

திரு விக்கினேஸ்வரன் அவர்கள் சில சந்தர்ப்பங்களில் கூடக்கூடாத கூட்டத்தாரோடு கூடியதால் ஏற்படும் சில விளைவுகள் போல சில பிறழ்வான செயல்களையும் பேச்சுக்களையும் ஆற்றியிருந்தாலும், அதேநேரத்தில் அவரின் இயல்பான குணாம்சங்களையும் பல சந்தர்ப்பங்களில் துணிச்சலாகவே வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதையும் நாம் அவதானிக்கத் தவறக் கூடாது.

அவர் தொடர்பான கேள்வி மற்றும் சிக்கல் எங்கிருந்து நோக்கப்படுகிறது என்றால், இவ்வளவு அறிவும் ஆற்றலும் அங்கீகாரமும் உடைய திரு விக்கினேஸ்வரன் அவர்கள் இதுவரை வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசிய நாடக அரசியல் வாதிகள் அவர்களின் சுயதிருப்திக்கான, சுய வெறுப்புக்கான மற்றும் சுயவிளம்பரம் பத்திற்கான அரசியற் சுலோகங்களை எழுப்பும் தளமாக மட்டுமே பயன்படுத்த இடமளித்திருக்கிறார் என்பதுதான்...

மாறாக இந்த மாகாண சபையை உரிய வகையில் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கும், மாகாண சபைகளின் அதிகாரப் பகிர்வுக்கும் நாட்டின் ஜனநாயக மற்றும் பல முற்போக்கான அம்சங்களின் எழுச்சிக்கும் உரிய நிறுவனமாக ஏன் இன்னமும் பயன்படுத்தப்படவில்லை என்பதுதான்...

இந்த மாகாண சபையானது, திரு விக்கினேஸ்வரன் அவர்கள் கற்பனை பண்ணியிருந்த அளவுக்கு அதிகாரங்களும் வசதிகளும் கொண்டதாக இல்லாவிடினும், முடிந்த அளவுக்கு இன்று கையில் கிடைத்திருக்கும் இந்த மாகாண சபையைப் பயன்படுத்தி தமிழர்களுக்கு இன்றைய நிலையில் அவசியமாக வேண்டியுள்ளனவற்றை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும் என்ற கருத்தோடு அவர் செயற்படாமல் இருப்பதுதான் இங்கு விசனத்துக்கும் விமர்சனத்துக்கும் உரியது.

வடக்கு மாகாணசபை வெறுமனே தமிழ்த் தேச சுயநிர்ணய அரசியற் களமாக மட்டும் தான் இருக்க வேண்டுமென்றால், திரு விக்கினேஸ்வரன் போன்ற ஒருவரை தமிழர்கள் முதலமைச்சராக ஆக்கியிருக்க வேண்டிய அவசியமில்லையே!

இவரை விட அதனை திரு மாவை சேனாதிராஜாவையோ அல்லது கௌரவ அடைக்கலநாதன் செல்வத்தையோ அல்லது கௌரவ சுரேஷ் பிரேமச்சந்திரனையோ முதலமைச்சர் ஆக்கியிருந்தால் மிகத் திறமையாக ஆக்ரோஷம் கொப்பளிக்கும் களமாக மாகாண சபையை எப்போதும் சுடச்சுட வைத்துக் கொண்டிருப்பார்களே!

எல்லோரையும் விட, சிவாஜிலிங்கமும், அனந்தியும் மாகாண சபையை முள்ளிவாய்க்காலில் நடத்தி எப்போதும் அதனை ஒரு சுடுகாட்டுக் கொதிநிலையிலேயே வைத்திருந்திருப்பார்களே!

தேர்தலில் போட்டிக்கு நின்று, வாக்குறுதிகளை வானளாவ அள்ளி வீசி போட்டிக்கு நின்றவர்கள மீது வாய்க்கு வந்தபடியெல்லாம் வசைபாடிவிட்டு,

இலட்சக் கணக்கில் மக்களிடம் வாக்குகளையும் பெற்று வெற்றிப் பவனிகளையும் முடிசூடல்களையும் நடத்திவிட்டு,

அமைச்சர்களையும் நியமித்து விட்டு, ஆறு மாதங்களுக்கு மேலாக சம்பளம் மற்றும் அதனோடு சேர்ந்து பல தலைப்புகளில் வருமானங்களையும் மாகாண சபையிலிருந்து எடுத்துக் கொண்டு,

மேலும் என்ன வசதிகள் சலுகைகள் கிடைக்குமோ அவற்றிற்கெல்லாம் கொஞ்சமும் வெட்கப்படாமல் உணர்ச்சிவசப்படாமல் மான ரோசம் பார்க்காமல் முன்கதவுகளாலும் பின்படலைகளாலும் வேண்டிய யாசக ஏற்பாடுகளையும் செய்து கொண்டு,

மாமன் மச்சான் அண்ணன் தம்பி என மாகாண சபையின் பல்வேறு பதவிகளில் சொந்தக்காரர்களையும் இருத்திவிட்டு,

இப்போது சொல்கிறார்கள் - மீண்டும் அவர்களது பழைய பாட்டான "13ஆவது திருத்த அரசியல் யாப்பை ஏற்கவில்லை", "அதில் அதிகாரம் எதுவுமில்லை", "எல்லா அதிகாரங்களும் ஆளுநருக்கே கொடுக்கப்பட்டுள்ளன" என்று மீண்டும் மீண்டும் பாடுகிறார்கள்.

இப்போதுள்ள மாகாண சபை முழுமையானது அல்ல என்பது பொது அறிவு.

13ஆவது திருத்த அரசியல் யாப்பு இலங்கையின் இன முரண்பாடுகளுக்கு - தமிழர்களின் பிரச்சினைகளுக்கு ஒரு முழுமையான நிரந்தரத் தீர்வாக முடியாது என்பது த.தே.கூ.க்காரர்கள் புதிதாகக் கண்டு பிடித்த ஒன்றல்ல.

கௌரவ விக்கினேஸ்வரனுக்கும் அவரது அமைச்சர்களுக்கும் சுமந்திரனுக்கும் இது புதிதாக இருக்கலாம்.

ஆனால் இது பற்றி முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் அறிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் இதுபற்றி இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரே நிறையவே சொல்லியிருக்கின்றன. தமிழர்கள் மட்டுமல்ல,

நியாயமான முற்போக்கான எண்ணம் கொண்ட சிங்களத் தலைவர்களும் புத்திஜீவிகளும் இதனைக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகவே சொல்லி வருகின்றனர். இதற்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார்கள். இங்கு அதுபற்றி ஒரு பெரிய விவாதமும் தேவையில்லை.

13ஆவது திருத்த அரசியல் யாப்பு திருப்தி அற்றது என்பதாற்தான், பிரேமதாசா ஆட்சிக் காலத்தில் கௌரவ மங்கள முனசிங்கா அவர்களின் தலைமையிலான நாடாளுமன்றக் கமிட்டி இந்திய அரசியல் யாப்புக்குச் சமனான அதிகாரப் பகிர்வை சிபார்சு செய்தது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் மாகாணங்களுக்கு ஒரு பிரதேச சுயாட்சிக்கு அண்மித்த அதிகாரங்கள் கொண்ட ஓர் புதிய அரசியல் யாப்பு பிரேரணையை 1995ஆம் ஆண்டு தொடக்கம் சொல்லி வந்து அதனை 2000ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்தார்.

ஆனபடியாற்தான் 2002ம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கா உலக நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்கி ஒரு சம்'டி (மாநில சுயாட்சி) அமைப்பை வழங்குவதற்கு ஒப்புக் கொண்டார்.

ஆனபடியாற்தான் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களின் தலைமையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷா அவர்களினால் அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சிகளின் அமைப்பு மாகாண சபைகளுக்கு ஒரு மிக விரிவான அதிகாரங்கள் கொண்ட ஒரு பிரேரணையை சிபார்சு செய்தது.

13ஆவது திருத்த அரசியல் யாப்பை திருப்தியானது என்றோ அல்லது அதுவே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இறுதியான உறுதியான தீர்வாக அமையும் என்றோ இங்கு யாரும் கூறவில்லை. இதிலொன்றும் புதிய கண்டுபிடிப்புகளை கண்டு பிடித்தவர்கள் போல இங்கு புதிய ததேகூக்காரர்கள் பெரிய விளக்க உரைகள் தர வேண்டிய அவசியமில்லை.

மாற்றுக் கோரிக்கை என்ன?

(நாளைய தினமுரசில்)

# கல்வியை ஒழிக்க ஒப்பந்தமா?

# ரணிலின் குற்றச்சாட்டு முழுப்பொய்

## ஆதாரத்தை முன்வைத்தால் பதவி விலகுவார் ஜனாதிபதி

(கொழும்பு)

**நாட்டின் கல்வியை பாதிப்படையச் செய்யக்கூடிய வகையில் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஐ.தே.க ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.**



இது தொடர்பாக நான் ஜனாதிபதியை நேரில் சந்தித்து வினவியபோது தான் அவ்வாறான தொரு ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்டுள்ளதை சர்வதேச நாணய நிதியத்தின் ஆதாரத்துடன் முன் வைத்தால் உடனடியாக பதவி விலகத் தயார் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக் கள கேட்போர் கூடத்தில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்- இலங்கையில் இதற்கு முன்னர் கல்வியை தனியார்மயப்படுத்துங்கள் - பாடசாலைகளை மூடுங்கள் என்ற கோஷங்களே எழுப்பப் பட்டு வந்தன. ஆனால் இன்று அந் நிலைமை மாறியுள்ளது.

நகர பாடசாலைகளுக்கும் உயர் பாடசாலைகளுக்கும் மட் டுமே கிடைத்த பல கல்வி வாய்ப்புக்கள் இன்று கிராம பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் கிடைக்கும் வகையில் செயற்படுபவர் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ மட்டுமே.

இன்று மகிந்தோதய ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய் யப்பட்ட பாடசாலைகளுக்கு மகிந்தோதய தொழில்நுட்ப கூடங்கள் அமைக்கப்படுகின்றன. அவற்றில் தொழில்நுட்ப கூடம்- மொழிகள் கூடம்- கணித கூடம் என இதுவரையில் இல்லாத வசதிகள் செய்துகொடுக்கப்ப டுகின்றன.

மகிந்த சிந்தனையின் கீழ் கல்வியில் பல்வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு தற்காலத்திற்கு ஏற்றவகையில் மாணவர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ள இந்த அரசு வழிகோலியுள்ளது.


இதுவரை வடக்கில் 90 மகிந்தோதய தொழில்நுட்ப கூடங்களும் கிழக்கில் 103 தொழில்நுட்பக்கூடங்கள் ஊவா மாகாணத்தில் 88 தொழில் நுட்பக்கூடங்கள் நிறுவப்பட்டுள் ளன.

அண்மையில் இலங்கை வந்த ஆசிய அபிவிருத்தி வங் கியின் உயர்மட்டக்குழு எமது நாட்டில் ஏற்பட்டுள்ள கல்வி அபிவிருத்தியைக் கண்டு மிகவு வியந்தது.

மேலும் இலங்கையை முன் மாதிரியாகக்கொண்டு ஏனைய நாடுகளிலும் கல்வியை அபிவி ருத்தி செய்ய ஐ.நா. நடவடிக்கை எடுக்கவேண்டும் என அறிக்கை சமர்ப்பிக்கப்போவதாக அந்தக் குழு தெரிவித்தது. அந்தளவுக்கு கல்வியில் அபிவிருத்தி காணப் படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# மதச்சுதந்திரத்தை தடுக்க எவருக்கும் உரிமையில்லை

## சோமவன்ச தெரிவிப்பு



நாட்டில் வாழும் எல்லா சமூகத்தினரும் அவரவர் சமயத்தைப் பின்பற்றவும் சமயக் கிரியைகளில் சுதந்திரமாக ஈடுப டவும் உரிமையுண்டு. அதனை யாரும் தடுக்கவோ அல்லது தடை விதிக்கவோ முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இந்த நாடு பல்லின மக்கள் வாழும் ஒரு நாடாகும். ஆகை யினால் ஒவ்வொரு சமயத்த வரும் தமது சமயங்களை சுதந்தி ரமாக பின்பற்ற எவ்விதத் தடை களையும் இடையூறுகளையும் விதிக்க எவருக்கும் அதிகாரம் இல்லை.

முஸ்லிம்கள் இந்த நாட்டின் அபிவிருத்தியின் பங்காளிகள். அவர்கள் இந்த நாட்டுக்கு வியாபார நோக்கத்துக்கு வந்த வர்கள். அந்த நோக்கத்தை நிறைவேற்ற அவர்களுக்கு பூரண சுதந்திரமுண்டு. அதனைத் தடுக்கவோ, அதை மறைக் கவோ யாருக்கும் முடியாது. நாட்டின் அபிவிருத்திக்கு வர்த் தகம் மிக முக்கியமானது.

முஸ்லிம்கள் இந்த நாட்டுக்கு எப்போதும் விசுவாசமாக நடந்து கொண்டார்கள். ஆகையினால் அவர்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவும் அதனை முறி யடிக்கவும் யாருக்கும் இடமளிக்க முடியாது.

எமது ஆட்சியில் நாம் அனைத்து சமயங்களுக்கும் கௌரவமளிப்போம். சமய அனுட் டானங்களை மேற்கொள்ள பூரண சுதந்திரம் வழங்குவோம் என்றார்.


# இரண்டு சரக்கு கப்பல்கள் சீனாவிடம் கொள்வனவு

(கொழும்பு)

இரண்டு சரக்குக் கப்பல் களை அரசாங்கம் சீனாவிடம் கொள்வனவு செய்யவுள்ளது. கடற்படைத் தளபதியும் கப்பற் கூட்டுத்தாபனத்தின் தலைவரு மான வைஸ் அட்மிரல் ஜயனாத் கொலம்பகே மற்றும் மக்கள் வங்கியின் பொதுமுகாமை யாளர் வசந்தகுமார் ஆகியோர் கப்பல் கொள்வனவு குறித்த உடன் படிக்கையில் கைச் சாத்திட்டனர். கொழும்பில் இந்த நிகழ்வு நடை பெற்றுள்ளது.

2015 ஒக்ரோபர் மாதத்தில் ஒரு கப்பலும் 2016ஆம் ஆண்டு ஜனவரி மற்றைய கப்பலும் கொள்வனவு செய்யப்பட உள் ளது. பாரியளவில் சரக்குகளை இந்தக் கப்பல்களின் மூலம் கடத்த முடியும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

# நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு இடதுசாரிகள் பேச்சு நடாத்தத் திட்டம்



(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது தொடர்பாக கலந்துரையாடலை நடாத்துவதற்கு நேரம் ஒதுக் கித்தருமாறு அரசில் அங்கம் வகிக்கும் இடது சாரிக்கட்சிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக ளிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

லங்கா சமசமாஜ கட்சி இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி, புதிய இடதுசாரி முன்னணி மற்றும் ஏனைய இடதுசாரிக் கட்சிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவிடம் இந்தக் கோரிக்கையை விடுத் துள்ளன.

அனுப்பப்பட்ட இந்தக் கடி தத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது தொடர் பாகவே பிரதானமாக பேசப்பட வுள்ளது.

கலந்துரையாடலை நடத்து வதற்கு கோரிக்கை விடுத்து பல நாட்களுக்கு முன்னரேயே கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அதன் பிரதியொன்று ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக லங்கா சமசமாஜக் கட்சியின் தலை வரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் பல்வேறு முறைப்பாடுகள் பதிவு



இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் இலஞ்ச ஊழல் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையே அவர்கள் பெருமளவில் இந்த முறைப்பாடுகளைச் செய்யக் காரணமென ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் தெரிவித் தார். இதன்படி கடந்த 2013 ஆம் ஆண்டு 3124 முறைப்பாடுகளும் இந்த வருடத்தின் மார்ச் 31 ஆம் திகதி வரையான மூன்றுமாத காலப்பகுதியில் 646 முறைப் பாடுகளும் கிடைக்கப்பெற்றுள் ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் லக்ஸ்மி ஜய விக்ரம தெரிவித்தார்.

இந்த வருடத்தின் ஏப்ரல் மாதத்தில் 24 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாகவும் அதில் 12 தொடர்பாக சுற்றிவளைப் புகள் நடாத்தப்பட்டு 13 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள தாகவும் அவர் கூறினார். அத் துடன் எந்தவொரு முறைப்பாட் டையும் நாம் அலட்சியமாக கருத வில்லை. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படை யில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 85 இலங்கை மீனவரை விடுவிக்கும் இந்தியா

இந்தியாவின் ஆந்திரா மற்றும் ஒடிசா ஆகிய மாநி லங்களிலுள்ள சிறைச்சாலை களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் 85 பேரை விடுவிப்பதற்கு இந்திய அர சாங்கம் இணங்கியுள்ளதாக இந்திய செய்தி தெரிவிக்கின்றது.

இந்திய பிரதமர் மோடிக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே மேற்கண்ட விடயம் தொடர்பில் ஆராயப்பட் டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்குச் செல்லும் முன்னர் இலங்கையில் உள்ள இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு பணித்திருந்தமை குறிப்பிடத்தக்க தாகும்..

# கடந்த 5 வருட வாகன விபத்தில் 2,728 மாணவர்கள் உயிரிழப்பு



(கொழும்பு)

2009 ஆம் ஆண்டு முதல் இதுவரை 2 ஆயிரத்து 728 பாடசாலை மாணவர்கள் வாகன விபத்துக்கள் காரணமாக உயிரி ழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.


இந்தக் காலப்பகுதியில் 8 ஆயிரத்து 524 மாணவர்கள் படுகாயமடைந்து அங்கவீன மடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமைக்கு பாட சாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகன சாரதிகள் மட்டுமின்றி பெற்றோர் உட்பட பாதுகாவலர்களும் பொறுப்புக் கூறவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கந்தான பிரதேசத்தில் பாட சாலை ஒன்றின் வாகனத் தரிப்பிடத்தில் வாகனம் ஒன்றில் மோதுண்டு ஒரு மாணவன் உயி ரிழந்ததுடன் மேலும் 4 பிள்ளை கள் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் சாரதியின் தவறு கார ணமாக ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான விபத்துக்களை பொலிஸாரினால் மட்டும் தடுக்க முடியாது.

விபத்தை ஏற்படுத்திய சாரதி 35 வருடங்கள் ஆசிரியராக பணியாற்றி பின்னர் அதிபராக இருந்து ஓய்வுபெற்றவர். சாவியை பயன்படுத்தி வாகனத்தை இயக்க முடியாததால், தள்ளி இயக்க முயற்சித்த போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனவும் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.



**நிதி அமைச்சின் 2013ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை நிதி திட்டமிடல் அமைச்சரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் கொழும்பு மிலோத்தா கட்டடத்தில் இடம் பெற்றது. நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பி.ஜய சுந்தர இந்த அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தார்.**





கைதடி முத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நிலைய வளாகத்தில் சரஸ்வதி சிலை திறந்து வைக்கப்படுவதையும் விருந்தினராக கலந்து கொண்ட சனசமூக நிலைய ஒன்றியங்களின் தலைவர் கந்தசாமி உரையாற்றுவதையும் அருகில் நிலையத்தலைவர் நிற்பதையும் பயனாளி ஒருவருக்கு கைதடி வளர்மதி நோர்வே வாழ் உறவான செல்வம் வழங்கிய சக்கர நாற்காலியை அவரது சகோதரி வழங்குவதையும் காண லாம். (51)

# சர்வதேச புகையிலை ஒழிப்பு பேரணி யாழ்ப்பாணத்திலும் நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச புகையிலை ஒழிப்புத் தினமான மே 31 ஆம் திகதி "புகையிலை ஒழிப்பு" எனும் தொனிப் பொருளில் பேரணி ஒன்று யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின மருத்துவப் பிரிவினாலும் யாழ்.பல்கலைக்கழக சமுதாய, குடும்ப மருத்துவத் துறையினராலும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.



நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து பேரணி ஆரம்பமாகி பருத்தித் துறை வீதியூடாக ஸ்ரான்லி வீதிச் துச் சென்று அங்கிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக யாழ்.பஸ்தரிப்பு நிலையத்திற்கு சென்று அங்கு புகைத்தலுக்கு எதிரான நிரந்தரமான பதாகை ஒன்றும் நாட்டப்படவுள்ளதுடன் அங்கிருந்து வீரசிங்கம் மண்டபம் சென்றடைந்து அங்கு கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக உடற்றொழிலியல்துறைப்பேராசிரியர் க.சிவபாலன் "புகையிலைப் பதார்த்தங்கள் பற்றிய ஓர் அறிமுகம்" தொடர்பிலும். பொது வைத்திய நிபுணர் தி.பேரானந்தராஜா "புகையிலைப் பாவனையூல் ஏற்படும் சுகாதார பாதிப்புக்கள்" தொடர்பிலும் புற்றுநோய் நிபுணர் திருமதி க.இந்திரநாத் "புகையிலையும் புற்றுநோயும்" எனும் தலைப்புக்களில் உரைநிகழ்த்தவுள்ளனர்.

இதன் போது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து வைத்திய கலாநிதி ஆர்.சுரேந்திரகுமாரன் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. யாழ். போதனாவைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற புகையிலை ஒழிப்பு தினம் தொடர்பிலான செய்தியாளர் சந்திப்பிலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கமும் மருத்துவ பீட சமுதாய மருத்துவத்துறையினரும் இணைந்து இந்த செய்தியாளர் சந்திப்பை மேற்கொண்டிருந்தனர். அதன் தலைவர் வைத்திய கலாநிதி ஆர்.சுரேந்திரகுமாரன் தலைமையில் இச் சந்திப்பு இடம்பெற்றது. (இ)

# நூல்கள் அறிமுகநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சி.அ.யோதிலிங்கத்தின் இரு நூல்கள் அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. திருமறைக் கலாமன்றத்தின் கலைக்கோட்டத்தில் மாலை 4 மணியளவில் 13 ஆவது திருத்தமும் தமிழ் மக்களும் இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் யாப்புக்களும் என்ற இரு நூல்கள் அறிமுகப்படுத்தப் பட்டவுள்ளன.

அருட்தந்தை ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நூல் அறிமுக நிகழ்வில் பிரதம அதிதியாக பேராசிரியர் க.சிற்றம்பலம் கலந்து கொள்ளவுள்ளார். அதேவேளை இவ்விரு நூல்களின் முதற்பிரதியினை இருதய நோய் வைத்திய நிபுணர் பூ.லக்ஸ்மன் பெற்றுக்கொள்ளவுள்ளார். (25)

## முரசின் இன்றைய பலன்



(30.05.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் வைகாசி மாதம் 16 ஆம் திகதி.
துதியை /சித்தி. கரிநாள்.
மிருகசீரிட நட்சத்திரம் மு.இ 09.11 வரை. பின் திருவாதிரை.
இராகு காலம் 10.22 - 11.52 வரை. சுபநேரம் 05.52 - 07.52 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வெகுநாள்தேடிக்கொண்டிருந்த பொருள்நினையாப்பிரகாரமாக சிக்குதல், உணவு நச்சுத்தன்மை அடைந்ததை அறியாமல் உண்ணமுயன்றதால் தேக சௌக்கியம் பாதிப்பு. |
| ரிஷபம் | முன்யோசனையுடன் செயற்பட்டதனால் வரவிருந்த பிரச்சினை முறையிலே கிள்ளி எறியப்படல், எதிர்பார்த்த பதவி ஏற்றம் கைநழுவிச் சென்றதால் மனக்கவலைப்படல். |
| மிதுனம் | இனிய அணுகு முறையினால் தேங்கிக்கிடந்த அரசுப்பணி நிலுவையின்றி முடிதல், எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது சென்றதால் வில்லங்கம் ஏற்படல். |
| கடகம் | கவனக் குறைவினால் ஏற்பட்ட தவறினை நீண்ட நேரத்தின் பின் கண்டு பிடித்தல், காணாமற் போனவற்றை அறிய சோதிடர் மூலம் தகவல் பெறச் செல்லுதல். |
| சிம்மம் | கடந்த காலத்தில்ஏற்பட்ட தவறினைப் பாடமாகக்கொண்டு பணி புரிந்ததால் நன்மை கிட்டுதல், குடும்ப உறுப் பினர்கள் ஒத்துழைப்பு நல்கியதால்சுற்றாடல்சுத்தம்நல்லபடியாக முடிதல். |
| கன்னி | எதிர்கால வாழ்வில் முன்னேற்றமும் நன்மையும் பெற புதிய வழிமுறையைத் திட்டமிடல், நீண்ட நாளின் பின் பழைய நண்பரைக் கண்டு பேசியமையால் ஆனந்தமடைதல். |
| துலாம் | போலியான லேபல்கள் ஒட்டப்பட்ட பொருட்கள் கைப் பற்றப்பட்டதால் தண்டம், வெளிநாட்டவரின் வருகையினால் குடும்பத்தில் மகிழ்ச்சிகளை கட்டுதல். |
| விருச்சிகம் | முடிவெடுக்க முடியாது தயங்கியவேளை நண்பரின் ஆலோசனையைச் செவிமடுத்து நன்மை கிட்டல், வெளியூர் பயணம்மேற்கொள்வதை சில தினங்களுக்கு ஒத்திவைத்தல். |
| தனுசு | பாதுகாப்பினை கச்சிதமாகப் பேணியதால் திருட்டுப்போகாது விடல், புதிய பொறுப்பினை ஏற்பதற்கு தயாராகி பயணத்திற்கான முயற்சியில் ஈடுபடல். |
| மகரம் | முடியுந்தறுவாயில் இருந்த விவாகம் சீதனப் பிரச்சினையால் இழுபடல், நோயைக் குணமாக்க மருத்துவ வசதியைக் கைவிட்டு தெய்வ தலத்தை நாடல். |
| கும்பம் | இரவுப்படுக்கையில் காணாக்கடி ஏற்பட்டதால் தேகநலம் பாதிக்கப்படல், உண்மை நிலை வெளிப்பட்டதால் சுமத்தப்பட்ட பழி நீங்குதல். |
| மீனம் | வெளியூர் மணமகன் பற்றிய தகவலில் முரண்பாடு இருப்பதினால் கைவிடும்நிலை ஏற்படல், பெற்றோரின் தேக நலப்பாதிப்பினால் வெளியூர் பயணத்தை ஒத்திவைத்தல். |

# கணனி உதிரிப்பாகங்களை திருடியவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி கொடிகாமம் பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் பாடசாலையின் கணனி அறையிலிருந்த உதிரிப்பாகங்கள் கடந்த 21 ஆம் திகதி களவாடப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸில் அதிபரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து இத்திருட்டு தொடர்பில் 17வயது சிறுவனொருவனை கடந்த திங்கட்கிழமை கைது செய்த கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதிநந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்செய்தபோது எதிர்வரும் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். 50 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருட்களே. திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (11)

# யாழ் - மண்டைதீவு பிரதான வீதியின் மதகுகளையும் புனரமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்போது மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு வரும் யாழ்ப்பாணம் - மண்டைதீவு பிரதான வீதியில் அமைந்துள்ள மதகுகள் அனைத்தும் அவ்வாறே மீண்டும் அமைக்கப்பட வேண்டும் என வேல்ணை பிரதேச சபைத் தவிசாளர் சி.சிவராசா வீதிப் புனரமைப்பு அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் - மண்டைதீவு பிரதான வீதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மதகுகள் இல்லாத வகையில் வீதிப்புனரமைப்பு செய்வதாயின் (மதகு இல்லாமல்) கடற்றொழிலாளர்கள் அதிகமாக பாதிக்கப்படுவார்கள் எனவே ஏற்கனவே இருந்த அனைத்து மதகுகளையும் அவ்வாறே அமைத்து வீதியினை புனரமைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (05)

# மணி விழா

கல்வியங்காடு, வீரபத்திரர் தேவஸ்தானத்தை சேர்ந்த சிவஸ்ரீ.பொன்னையா குருக்கள் வரதராஜ குருக்கள் விக்கினேஸ்வரி அம்மா தம்பதிகளுக்கு மணிவிழா கொண்டாடப்படவுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரையுள்ள சுபவேளையில் கல்வியங்காடு வீரபத்திரர் கோவிலடியில் இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது. இச் ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைரவிழாவில் (மணிவிழா) அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (137)

# வெளிவந்துள்ளது ஐக்கிய தீபம்

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையினால் வெளியிடப்படும் ஐக்கியதீபம் ஏப்ரல் - மே மாத இதழ் வெளிவந்துள்ளது. பெண்கள் தலைமைத்துவ ஆற்றலின் சாதனையே சமூக அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனம் என யாழ்.அரச அதிபரின் பாராட்டுச் செய்தியை முன்பக்கம் தாங்கி பல்வேறு கூட்டுறவுத்துறை சார்ந்த செய்திகளுடன் இந்த இதழ் வெளிவந்துள்ளது.

INDIAN PREMIER LEAGUE 2014


# இன்றைய ஆட்டம்

**தெரிவுச் சுற்று – 2**

**சென்னை எதிர் பஞ்சாப்**

**இடம்: மும்பை. நேரம்: இரவு 8 மணி**

# சகோதரிகள் வெளியேற்றம்



(பரிஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் அதிர்ச்சித் தோல்விகள் தொடர்கின்றன. முதல்நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்சும், அவரது அக்கா வீனஸ் வில்லியம்சும் 2ஆவது சுற்றிலேயே தோல்வியை சந்தித்தனர்.

பிரான்ஸ் தலைநகர் பரிசில் நடைபெற்றுவரும் பிரெஞ் ஓப்பன் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவு 2ஆம் சுற்றுப் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன. இதில், முதல்நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், 35ஆம் நிலை வீராங்கனையான ஸ்பெய்னின் கார்பைன் முகுருசாவை எதிர்த்து விளையாடினார். கிராண்ட்ஸ்லாம் போட்டியில் 4ஆம் சுற்று வரையிலும் பிரெஞ் ஓப்பனில் 2ஆம் சுற்று வரையிலும் முன்னேறியதே கார்பைனின் சாதனை. இதனால், 13 கிராண்ட்ஸ்லாம்களை வென்ற செரீனா எளிதில் வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும், கார்பைனின் அதிரடிக்கு சற்றும் ஈடுகொடுக்க முடியாமல் திணறிய செரீனா 2-6, 2-6 என்ற நேர் செட்களில் மிக எளிதாக தோல்வியடைந்தார்.

முன்னதாக, 29ஆம் நிலை வீராங்கனையான செரீனாவின் அக்கா வீனஸ் வில்லியம்ஸ் 6-2, 3-6, 4-6 என்ற செட்களில் சுலோவாகியாவின் அன்னா ஸ்மிட்லோவா விடம் தோல்வி அடைந்தார். ஏற்கனவே, சீனாவின் லிநா அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் ஜோகோவிச் 6-1, 6-4, 6-2 என்ற நேர் செட்களில் பிரான்ஸ் சார்டியையும், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் 6-3, 6-4, 6-4 என்ற செட்களில் வென்று 3ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

# கடும் கோபத்தில் சவுதி இரசிகர்கள்



சவுதி அரேபிய கால்பந்து கிளப் பயிற்சியாளரின் மனைவி பிளேபோய் இதழுக்கு நிர்வாணமாக போஸ் கொடுத்ததைத் தொடர்ந்து இரசிகர்கள் கடும் கோபத்தில் உள்ளனர்.

சவுதி அரேபியாவில் உள்ள பிரபலமான கால்பந்து கிளப்பான அல்–ஹிலால்விற்கு ருமேனியாவை சேர்ந்த லோரன்ஸ் டியு ரெகெகேம்ஸ் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இரண்டு வருடங்களுக்கு இந்திய மதிப்பில் ரூ.14 கோடிக்கு அந்த கிளப்பிற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அதே நேரத்தில் இவரது மனைவி அன்ன மரியா புரோடோன் உலகக் கால்பந்து சங்க கூட்டமைப்பின் ருமேனியாவின் முதல் பெண் முகவராக உள்ளார்.

இந்நிலையில் மரியா புரோடோன் பிளேபோய் இதழுக்கு நிர்வாணமாக போஸ் கொடுத்துள்ளார். இது ஐக்கிய அரபு நாடுகளின் கால்பந்து இரசிகர்களுக்கு கோபத்தை வரவழைத்துள்ளது.

இதைத் தொடர்ந்து பயிற்சியாளரால் அவரது மனைவியையே கட்டுப்படுத்த முடியவில்லை. பிறகு எப்படி அல்–ஹிலால் கால்பந்து வீரர்களை கட்டுப்படுத்த முடியும் என கால்பந்து இரசிகர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும் கால்பந்து இரசிகர்கள் சமூக இணையத் தளங்கள் மூலம் அல்–ஹலால் கால்பந்து கிளப்புக்கு தங்களது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

# சிறு பிள்ளைத்தனமான தீர்மானம்

ஐ.பி.எல். ருவென்ரி–20 கிரிக்கெட் தொடரில் பயிற்சியாளர்களாக பாகிஸ்தானியர்கள் தொடர்வதற்கு அனுமதி வழங்கப்படும் அதேவேளை, வீரர்கள் பங்கேற்றால்தான் பிரச்சினை. இது சிறுபிள்ளைத் தனமானதொரு தீர்மானம் என பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சயிட் அஜ்மல் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் பயிற்சியாளர்கள் ஐ.பி.எல். போட்டிகளில் இருக்கும் போது வீரர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படுவது ஏன்?. பாகிஸ்தான் வீரர்களுக்கும் ஐ.பி.எல். போட்டிகளில் விளையாட வாய்ப்பளிக்க இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) முன்வர வேண்டும். மேலும் உலகிலேயே மிகச் சிறந்த ருவென்ரி–20 தொடர் ஐ.பி.எல். என்று பி.சி.சி.ஐ. கூறுமானால் பாகிஸ்தான் வீரர்களையும் விளையாட அனுமதிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

**பங்களாதேஷ், இங்கிலாந்து தொடர்**

# இந்திய அணியில் உத்தப்பா, கம்பீர்

பங்களாதேஷ் அணிக்கு எதிரான 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சுரேஷ் ரெய்னாவுக்கு கப்டன் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. முக்கிய வீரர்களான டோனி, ஹோலி, தவான், ரோகித் சர்மா, அஸ்வின், ஜடேஜா, முகமது சமி ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. ஐ.பி.எல். கிரிக்கெட்டில் அசத்திவரும் ரொபின் உத்தாப்பா மீண்டும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். மார்ச் 2012 தான் அவர் இந்தியாவுக்காக கடைசியாக விளையாடியது என்பது குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷ் தொடருக்கான அணி: ரெய்னா (கப்டன்), ரொபின் உத்தப்பா, ரஹானே, புஜாரா, அம்பாதி ராயுடு, மனோஜ் திவாரி, கேதார் ஜாதவ், சாஹா, பர்வேஸ் ரசூல், அஸ்கர் பட்டேல், வினய் குமார், உமேஷ் யாதவ், பின்னி, மோகித் சர்மா, அமித் சர்மா.

இதேவேளை, இங்கிலாந்து அணிக்கு எதிராக நடைபெறவுள்ள 5 டெஸ்ட் போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சகீர்கான், சேவாக், ஹர்பஜன்சிங் ஆகியோர் அணியில் இடம்பெறவில்லை. கம்பீர் மீண்டும் இடம்பெற்றுள்ளார்.

இங்கிலாந்து தொடருக்கான டெஸ்ட் அணி. டோனி (கப்டன்),முரளி விஜய், தவான், கௌதம் கம்பீர், புஜாரா, விராட் ஹோலி, ரஹானே,

ரோகித் சர்மா, ரவீந்திர ஜடேஜா,அஸ்வின்,புவனேஷ் குமார், சமி, ஈஷவர் பாண்டே, இசாந்த் சர்மா, ஸ்டுவர்ட் பின்னி, வருண் ஆரோன், சாஹா, பங்கஜ் சிங்.

# உலகக் கிண்ணப் போட்டிகளை பசுமை நிகழ்வாக்கும் பிரேசில்

20ஆவது உலகக் கிண்ண கால்பந்துப் போட்டியை பசுமை நிகழ்ச்சியாக நடாத்த பிரேசில் திட்டமிட்டுள்ளது.


தென் அமெரிக்க நாடான பிரேசிலில் வரும் யூன் மாதம் 12ஆம் திகதியன்று ஆரம்பமாகும் உலகக் கிண்ண கால்பந்தாட்டத் திருவிழா யூலை மாதம் 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இலட்சக் கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இரசிகர்கள் கலந்துகொள்ளும் இந்த நிகழ்ச்சிகளின் போது கிட்டத்தட்ட 59,000 தொன் கார்பன் உமிழ்வு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுமட்டுமின்றி மறைமுக வெளிப்பாடுகளும் இணைந்து இந்த அளவானது 1.4 மில்லியன் அளவை எட்டக்கூடும் என்று கூறப்படுகின்றது. விளையாட்டுப் போட்டிகளுக்காகக் கட்டடங்கள் கட்டப்படுதலும் அளவுக் கதிக மான இரசிகர்களின் நடமாட்டமும் போட்டிகள் நடாத்தப்படுவதுமே சிஓ2 என்ற கிரீன்ஹவுஸ் வாயுக்கள் மூலம் உலக வெப்பமயமாதலை அதிகரிக்கும் இந்தக் கழிவுகளின் அளவினைக் குறைக்கும் பல திட்டங்களை பிரேசில் வெளியிட்டுள்ளது.

இத்தகைய மாசு குறைப்பு நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக ஸ்மார்ட்போன் பயன்பாடுகள் மூலம் பாஸ்போர்ட் பெறும் முறைகளும் விளம்பர உரிமை–களைக் கோரும் நிறுவனங்கள் மாசு குறைப்பிற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் அந்நாட்டு அரசால் வரவேற்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வண்ணம் மாசு குறைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு இந்த விளையாட்டுப் போட்டியை பசுமை நிகழ்ச்சியாக நடாத்தத் திட்டமிட்டிருப்பதாக அந்நாட்டின் சுற்றுச் சூழல் அமைச்சர் இசபெல்லா டெக்செய்ரா தெரிவித்துள்ளார்.



# உலக கால்பந்தாட்ட விழா வெல்லப்போகும் அணி எது?



**எஸ். அன்ரனிப்பிள்ளை கிளிபேட்**
தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்

## பிரான்ஸ் சிறு பார்வை

பிரான்ஸ் நாட்டின் மக்கள்தொகை 6 ½ கோடி. 1938, 1998 இல் உலகக் கிண்ணத்தை நடாத்தியது.1 998 இல் உலக கிண்ணத்தைக் கைப்பற்றியபோதும் 2002,2010 இல் முதலாம் சுற்றுடன் வெளியேறியது.

2006இல் இரண்டாம் இடத்தைக் கைப்பற்றியது.2010 உலகக் கிண்ணத்தில் பங்கேற்ற, ஐரோப்பாவின் சிறந்த கோல் காப்பாளர்களில் ஒருவரான, 27 வயது, கியுகொ லொறிஸ் (Hugo Lloris) அணிக்குத் தலைமை தாங்குகிறார். 2006, 2010 உலகக் கிண்ண போட்டிகளிலும் 2008, 2012 ஐரோப்பிய கிண்ணப் போட்டிகளிலும் பங்கு கொண்ட, 31 வயது இடது முன் கள வீரர் பிராங்க் றிப்றி (Frank Ribery) குறிப்பிடத்தக்கவர். இவர், ஐரோப்பாவிலேயே மிகக் கூடுதலாக, பந்தை வெட்டி விளையாடும் வீரராவார்.

21 வயது மத்திய கள வீரர்,போல் பொக்பா (Paul Pogba) விற்கு இது முதலாவது உலக கிண்ணம்.1998இல் பிரான்ஸ் அணிக்குத் தலைமை வகித்த, 45 வயது டிடியர் டேகாம் (Didier Deschamps) அணியின் பயிற்சி யாளராவார்.

Brasil 2014 FIFA WORLD CUP

**கால்பந்து திருவிழா**

**இன்னும் 13 நாட்கள்**

# ஜெசிந்தா, நெல்லியடி மத்தி, பருத்தித்துறை கலட்டி மாகாண கபடிப் போட்டியில் சம்பியன்

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கபடிப் போட்டியில் பண்டத்தரிப்பு ஜெசிந்தா மகா வித்தியாலயம், நெல்லியடி மத்திய கல்லூரி, பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்கப்பாடசாலை அணிகள் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டன.

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் விளையாட்டுப் பிரிவு வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் பெருவிளையாட்டுப் போட்டியை நடாத்தி வருகின்றது. இதில் 15 மற்றும் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகளுக்கிடையிலான கபடிப் போட்டி நேற்று முன்தினம் முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு ஜெசிந்தா மகாவித்தியாலய அணியும் வவுனியா பரக்கும்பா மகாவித்தியாலய அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஜெசிந்தா மகாவித்தியாலய அணி 28-25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் இளவாலை திருக்குடும்ப கன்னிர் மட வித்தியாலய அணியும் மோதின. இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 20-18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

19 வயதுப் பிரிவு பெண்கள் அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 21-17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. மூன்றாமிடத்திற்கான போட்டியில் கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர் வித்தியாலய அணியும், முல்லைத்தீவு முத்தையன்கட்டு மகாவித்தியாலய அணியும் மோதின. உருத்திரபுரம் சிவநகர் வித்தியாலய அணி 30-26 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்ற மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

19 வயதுப் பிரிவு ஆண்கள் அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் சில்லாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணியும் பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணியும் மோதின. இதில் பருத்தித்துறை கல்ட்டி றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணி 30-25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இப்பிரிவின் மூன்றாமிடத்தை கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர் வித்தியாலய அணி கைப்பற்றிக் கொண்டது.

வடக்கு மாகாண உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் கோட்ட, வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், பயிற்றுநர்கள், கல்விச் சமூகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், விளையாட்டு ஆர்வலர்கள், நலன்விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (93,12)

## நீலங்களின் சமர் கிளிநொச்சியில் இன்று

(கிளிநொச்சி)

நீலங்களின் சமர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி இன்றைய தினம் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் மற்றும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையில் நடைபெற்று வந்த நீலங்களின் சமர் கடந்த காலப் போர் நடவடிக்கைகள் காரணமாக தொடர்ந்து நடாத்த முடியாமல் கைவிடப்பட்டது. இந்நிலையில் இரு பாடசாலைகளின் பெரு முயற்சியால் இப்போட்டி மீண்டும் நடாத்தப்படவுள்ளது.

இந்நிலையில் நீலங்களின் சமர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டி நாளை மாலை வரை நடைபெறவுள்ளது. கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணிக்கு டிலுக்ஷனும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணிக்கு மயூரனும் தலைமை தாங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டி நிகழ்வில் பழைய மாணவர்கள், ஆதரவாளர்கள் என சகல தரப்பினரையும் கலந்துகொண்டு போட்டியாளர்களை உற்சாகப்படுத்துமாறு பாடசாலைச் சமூகம் கேட்டுள்ளது.

## 6 விக்கெட்டுக்களால் வென்றது யாழ். மத்தி

விளையாட்டுச் செய்திகள்

(யாழ்ப்பாணம்)

ஜான்சனின் அபாரமான பந்து வீச்சின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் யாழ். மத்திய கல்லூரி மற்றும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணிகளுக்கிடையிலான போட்டி கடந்த 27ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 26.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெனார்த்தனன் 25, டினேஸ் 13, மதிவாணன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜான்சன் 21 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, அனஸ்ராஜ் 17 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 106 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி 22.5 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் நிதர்சன் ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 45, நிலோஜன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டினேஸ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். (எஸ்.பி.)

## துரையப்பாவில் மாவட்ட கபடி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடாத்தப்படும் பிரதேச அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட ஆண்களுக்கான கபடிப் போட்டி நாளை காலை 8.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, பெண்களுக்கான கபடிப் போட்டி நாளை மறுதினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகனதாஸ் தெரிவித்துள்ளார். (எஸ்.பி.)

# பற்றீசியன்ஸ், ஸ்கந்தா ஸ்ரார், சென்றலைட்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். ருவென்ரி-20 தொடரில் கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற போட்டிகளில் யாழ். பற்றீசியன்ஸ் மற்றும் ஸ்கந்தா ஸ்ரார் மற்றும் சென்றலைட்ஸ் அணிகள் வெற்றிபெற்றன.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் ஜே.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வருகின்றது.

கடந்த 25ஆம் திகதி இரு ஆட்டங்கள் நடைபெற்றன. முதல் போட்டியில் யாழ். பற்றீசியன்ஸ் மற்றும் யங்ஸ்ரார் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யங்ஸ்ரார் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய பற்றீசியன்ஸ் அணி அஜித் டர்வின், நவதீபன் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் பற்றீசியன்ஸ் அணி 19.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஜித் டர்வின் 40, நவதீபன் 22, லிவிங்ரன் 20, நோபேட் 14, ரியூடர் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் குமுதன், சஜந்தன், முகுந்தன், கமலுக்ஷன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 167 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யங்ஸ்ரார் அணி நோபேட்டின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் யங்ஸ்ரார் அணி 17.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் நோபேட் நிசாந் 35, பிரதீபன் 21, குமுதன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நோபேட் நான்கு, லிவிங்ரன், கிளிங்ரன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக நோபேட் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் மற்றும் கொக்குவில் கே.சி.சி.சி. அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கந்தா ஸ்ரார் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பங்குஜன் 28, ஜனுதாஸ் 12, சிலோஜன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விஸ்ணு பிரகாஸ் இரண்டு ஜனக்ஷன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 101 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஸ்கந்தா ஸ்ரார் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் துபிஷன், சஞ்சஜன் ஆகியோர் தலா 12, நிசாகரன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராகுலன் நான்கு, சாம்பவன் இரண்டு, சிலோஜன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக ஜனக்ஷன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் சென்றலைட்ஸ் அணியும் ஜொனியன்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி

பெற்று முதலில் ஆடிய ஜொனியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 102 ஓட்டங்களைப்பெற்றது. இதில் துவாரகசீலன், விதுஷன் ஆகியோர் தலா 12, காண்டீபன் 10, லவேந்திரா, அன்புஜன் ஆகியோர் தலா 9 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கிசாந்தன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 103 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி 11.2 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் விதுஷன் 58, எரிச் துசாந் 12 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். பந்து வீச்சில் அகிலன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக விதுஷன் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை, நாளைய தினம் இரண்டு போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



நோபேட்



ஜக்ஷன்

# இலங்கையில் எல்.ரீ.ரீ.ஈ யினை புதுப்பிக்கும் குறைப்பிரசவ முயற்சியின் உடற்கூற்றியல்

- டி.பி.எஸ் ஜெயராஜ் - 6



புலனாய்வாளர்களுக்கு கிடைத்த மற்றொரு தகவலில் தேவிகனுக்கு வவுனியா பேருந்து நிலையம் அருகில் வியாபார நிலையம் ஒன்று இருப்பதாகவும் அவன் அதை தனது மறைவான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதாகவும் தெரிய வந்தது. இது பிரதானமாக விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பொருட்கள் என்பனவற்றை விற்பனை செய்யும் ஒரு இடமாகும். அந்த நிறுவனத்தின் பெயர் "டாட்டா ஸ்போட்ஸ் கோர்னர்" என்பதாகும், அங்கு கணணி மற்றும் போட்டோ பிரதி சேவைகளும் வழங்கப்பட்டு வந்தன. தொலைபேசி அழைப்பு அட்டைகளும் அங்கு விற்கப்பட்டு வந்தன.

தெய்வன் எனும் பெயரை இங்கு பயன்படுத்தி வந்த தேவிகன் வழக்கமாக அடிக்கடி "டாட்டா ஸ்போட்ஸ் கோர்னருக்கு" சென்று அங்கிருந்து தொலைபேசி மற்றும் கணணி மூலமாக தொடர்பாடல்களை நடத்தி வந்தார். அவர் அங்கு மக்களையும் சந்தித்து வந்தார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த அமிர்தலிங்கம் திலீபன் என்கிற ஆசிரியர் "டாட்டா ஸ்போட்ஸ் கோர்னரின்" உரிமையாளராக இருந்து அதை நடத்தி வந்தார். அவர் 2005இல் வவுனியாவுக்கு வந்து வவுனியாவில் உள்ள பல்வேறு பாடசாலைகளிலும் கடந்த வருடங்களில் கல்வி கற்பித்து வந்தார். அவர் இந்த விளையாட்டு உபகரணக் கடையை ஆரம்பித்தது, ஒரு. பக்க வருமான மார்க்கத்துக்காக மற்றும் தான் ஆசிரியராக இருப்பதால் தனது செல்வாக்கை பயன்படுத்தி பாடசாலை பிள்ளைகளுக்கு உற்பத்திகளை விற்கலாம் என்பதும் அதன் நோக்கத்தில் ஒன்று.

தேவிகனால் தான் ஒரு மறைப்பாக பயன்படுத்தப் படுகிறோம் என்பது வெளிப் படையாகவே திலீபனுக்கு நன்கு தெரியும், அதனால் அவரைக் கைது செய்வ தற்கு முன்பாகவே அவர் ஓடிவிட்டார். அவர் இந்த நாட்டை விட்டு இந்தியா வுக்கு இந்த வருடம் ஏப்ரல் 5இல் விமானம் மூலம் சென்றுள்ளார். அந்த வியாபார நிலையம் இப்போது மூடி சீல் வைக்கப்பட்டுள்ளது.

அயராது விசாரணை-களை மேற்கொண்ட விசாரணையாளர்கள் தெள்ளத் தெளிவாக கண்டு பிடித்தது, எல்.ரீ.ரீ.ஈயினை புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்ட மனிதர்களில் இந்த முழு நடவடிக்கைக்கும் பின்னால் இருந்து இயக்கிய சக்தி வாய்ந்த இயந்திரம் அப்பனோ அல்லது கோபியோ இல்லை ஆனால் அது தேவிகன்தான் என்கிற உண்மையை.

புதிய எல்.ரீ.ரீ.ஈ அதன் உருவாக்க கட்டங்களில் ஒரு மூவரணியை அதன் தலைவராக கொண்டிருந்தது. கோபி உளவுப் பிரிவுக்கு பொறுப் பாகவும் மற்றும் அப்பன் பிரச்சாரங்களுக்கு பொறுப்பாகவும் இருந்துள்ளார். தேவிகன் தாக்குதல் அல்லது செயல்பாடுகளுக்கு பொறுப்பாக இருந்துள்ளார். தேவிகன் எல்.ரீ.ரீ.ஈயினை புதுப்பிக்கும் நடவடிக்கை களின் ஒட்டு மொத்தத்துக் கும் பொறுப்பாக இருந்திருக்கிறார். விரை வாகவே இந்த மூவரும் தேவைப் படுகிறார்கள் என்பதை கூறும் துண்டுப் பிரசுரங்கள் வெளியாகின. 42,000 துண்டுப் பிரசுரங்கள் வடக்கு முழுவதும் ஒட்டப்பட்டிருந்தன.

இதன் விளைவாக வடக்கிலுள்ள சாதாரண மக்களிடம் இருந்து இன்னும் அதிகமான தகவல்கள் வெளிவந்தன. கிடைத்த துப்புக்கள் யாவும் பின்பற்றப்பட்டு சரிபார்க்கப்பட்டன. வட பகுதி வவுனியாவில் உள்ள வெடிவைத்தகல்லு பகுதியில் இருந்து ஒரு சாதகமான துப்பு கிடைக்கப் பெற்றது. மரம் வெட்டும் தொழிலாளர்கள், அடர்ந்த காட்டுக்குள் சந்தேகத்துக்கு இடமான வகையில் சிலரது நடமாட்டங்களைக் கண்டார்கள் என்று கூறப்பட்டது.

ஒரு பெரிய காட்டுப் பாதை, வெடிவைத்தகல் லிருந்து ஊத்துக்குளம் ஊடாக போகஸ்வெ வரை நீட்டிக்கப்பட்டது. காட்டின் ஒரு முனை வவுனியா மாவட்டம் வெடிவைத்தகல்லு பகுதியில் இருந்த அதே வேளை அதன் மறுமுனை அனுராதபுரம் பகுதி யில் உள்ள பதவிய பகுதியில் இருந்தது. தேடப்படும் புலிகளின் மூவர்கள் காட்சியளித்ததாக கூறப்பட்ட காடு சுமார் 12 - 15 சதுர கிலோமீட்டர் பரப்பளவுடையது.


ஏப்ரல் 10 - 11ஆம் திகதி நள்ளிரவில் ஒரு பிரமாண்டமான இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின் விளைவாக தேவிகன்- அப்பன் - கோபி என்கிற மூவரும் ஒரு துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தால் இராணுவ வீரர்களால் கொல்லப்பட்டார்கள்.

2009 பெப்ரவரியில் ராதா படையணி தலைவர் ரட்னம் மாஸ்ரரினால் முல்லைத்தீவு மாவட்டம் காரைதுறைப்பற்றில் முற்றுகைக்கு உள்ளாகியிருக்கும் கடற்பகுதிக்கு இடம்பெயரும்படி தேவிகனிடம் கேட்கப்பட்டது. அவர் நெடுங்கேணி காட்டிற்கு எல்.ரீ.ரீ.ஈ தலைவர் பிரபாகரனின் சம்மதத்தோடு ஒரு இரகசிய நடவடிக்கைக்காக அனுப்பப் பட்டிருந்தார்.

அந்த நடவடிக்கை எல்.ரீ.ரீ.ஈ தலைவர் வேலுப்பிள்ளை பிரபா-கரனை நெடுங்கேணி காட்டிற்குள் இருக்கும் ஒரு மறைவான தளத்திற்கு இரகசியமாக இடம் பெயர்த்துவதுதான். அங்கிருந்து புலித் தலைவரை கிழக்கிற்கு நகர்த்தி தேவைப்பட்டால் வெளிநாட்டுக்கும் கொண்டுபோவதுதான் இந்த திட்டம். கையிருப்பிலிருந்த திட்டங்களில் பிரபாகரனை-வான் வழியாக வெளியேற்றும் திட்டமும் அடங்கியிருந்தது. தேவிகன் ஒரு பயிற்சி பெற்ற விமானியும் மற்றும் நம்பிக்கையான ஒரு லெப்ரினன் ஆகவும் இருந்ததால் இந்தப்பணிக்கான பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது வெளிப்படை.

அத்தகைய ஒரு சம்பவம் ஒருபோதும் நடக்கவில்லை. படைத் தரப்பில் போடப்பட்டிருந்த வளையத்தை ஊடுருவி தனது பாதுகாப்புக்காக கண்டுபிடித்து இப்போது அடைபட்டுக் கிடக்கும் கரையோரத் துண்டின் காவலை உடைத்துக் கொண்டு வன்னி பெரு நிலப் பரப்பை அடைவது சாத்தியமற்றது என்பதை பிரபாகரன் உணர்ந்தார். எல்.ரீ.ரீ.ஈயின் பெருந் தலைவரும் மற்றும் அவரது மூத்த தளபதிகளும் அங்கு கொல்லப்பட்டதை அனைவரும் நன்கு அறிவார்கள்.

(தொடரும்)




## ட்விட்டரில் 25.5 கோடி பயனாளர்கள்!

வலை மனை அமைத்து தகவல்களை வெளிப்படுத்தத் துணை புரியும் ட்விட்டர் தளத்தில், மாதம் ஒன்றில், தொடர்ந்து செயல்படுவோரின் எண்ணிக்கை 25.5 கோடியாக உயர்ந்துள்ளதாக, ட்விட்டர் அறிவித்துள்ளது. சென்ற மூன்று மாதங்களில் மட்டும் 1.4 கோடி பேர் இணைந்துள்ளனர். சென்ற ஆண்டில் இறுதியில் இதன் பயனாளர் எண்ணிக்கை 24.1 கோடியாக இருந்தது. தற்போது 6 சதவீதம் அதிகரித்துள்ளது.

மொபைல் வழி பயனாளர் எண்ணிக்கை 19.8 கோடி என அறிவிக்கப்பட்டுள்ளது. இது மொத்த பயனாளர்களில் 78 வீதம் ஆவார்கள். இந்த ஆண்டின் முதல் மூன்று ஆண்டுகளில் இதன் வருமானம் 25 கோடி டொலராக உயர்ந்துள்ளது. இதில் 80 வீதம் மொபைல் விளம்பரத்தின் மூலம் கிடைத்துள்ளது.

## செய்ய நினைப்பதெல்லாம்...

வாழ்க்கையில் துன்பத்தின் நிழல்கூட படியாதிருப்பதற்கு மார்ட்டின் லூதர் கிங்கின் அறிவுரைகள்.

1. கேட்பதை எல்லாம் நம்பிவிடாதீர்கள்.
2. செய்ய நினைப்பதையெல்லாம் செய்து விடாதீர்கள்.
3. தெரிந்ததையெல்லாம் பிறரிடம் சொல்லி விடாதீர்கள்.
4. இருப்பவை அனைத்தையும் பயன்படுத்தி விடாதீர்கள்.



தமது பதவிப் பிரமாண வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு மோடி, சார்க் அமைப்பின் சகல நாடுகளினதும் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார். உண்மையிலேயே இதில் அசாதாரணத் தன்மை காண்பதாக இருந்தால் காண வேண்டியது ராஜபக்ஷவுக்கான அழைப்பில் அல்ல. பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷரீபுக்கு விடுக்கப்பட்ட அழைப்பே அசாதாரணமான அழைப்பாக கருதப் படல் வேண்டும். ஏனெனில் இந்தியாவும் பாகிஸ்தானும் நட்பு நாடுகளாக மரபு ரீதியாக கருதப்படுவதில்லை.

பா.ஜ.க.வின் இந்துத்துவக் கொள்கையை கவனத்தில் கொள்ளும் போது பாகிஸ்தானும் உள்ளடங்கும் வகையில் மோடி, சார்க் நாடுகளின் தலைவர்களை அழைப்பதே வித்தியாசமான விடயமாகும். தமிழகத் தலைவர்கள் இலங்கைத் தலைவர்களுடன் முரண்படுவதை விட பா.ஜ.க.வினர் பாகிஸ்தான் தொடர்பில் முரண்படுகிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த விடயமாகும். எனவே அந்தப் பிரச்சினைகளை ஒரு புறம் வைத்துவிட்டு சகல சார்க் நாடுகளினதும் தலைவர்களை பா.ஜ.க. அழைக்கும் போது இந்துத் தீவிரவாதக் கட்சி என்று தமக்கு இருக்கும் அவப்பெயரை நீக்கிக்கொள்ள அக்கட்சி முயற்சிக்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது.

பா.ஜ.க. பதவிக்கு வந்த முதன் முறை இதுவல்ல. 1998ஆம் ஆண்டு அடல் பிஹாரி வாஜ்பாயின் தலைமையிலும் அக்கட்சி பதவிக்கு வந்தது. அப்போதும் அக்கட்சியின் தலைவர்கள் இது போன்று பாகிஸ்தான் விடயத்தில் சுமுகமான கொள்கையொன்றை கடைப்பிடிக்க முற்பட்டனர். வாஜ்பாய், பாகிஸ்தானுக்கு பஸ் சேவையொன்றை ஆரம்பித்து முதலாவது பஸ்ஸில் தாமும் பாகிஸ்தானுக்குச் சென்று பாகிஸ்தான் விடயத்திலான இந்திய நிலைப்பாட்டை மாற்ற முயற்சி செய்தார். எனவே இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுப்பதானது பாரியதோர் திட்டத்தின் மிகச் சிறியதோர் விடயமாகும்.

தமிழ் நாட்டுத் தலைவர்கள், இலங்கைத் தலைவர்களுடன் முரண்பட்டுக்கொண்டு இருந்த போதிலும் இந்திய மத்திய அரசாங்கத்திற்கோ அல்லது மத்திய அரசாங்கத்தின் புதிய ஆளும் கட்சியான பா.ஜ.க.வுக்கோ இலங்கை அரசாங்கத்துடன் அவ்வளவு பெரிய பிரச்சினைகள் இல்லை. தமது தேர்தல் பிரசாரத்தின் போதும் மோடி, பாகிஸ்தான் மற்றும் சீனாவை சாடி பேசினாரேயல்லாமல் இலங்கையைப் பற்றி ஒரு வார்த்தையேனும் மோசமாக பேசியதில்லை.

மோடி விடுத்த அழைப்பை




சரத்குமார் ஹீரோ, வில்லன் என இரட்டை வேடங்களில் நடிக்கும் படத்துக்கு "சண்டமாருதம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஏ.வெங்கடேஷ் இயக்குகிறார். திரைக்கதை, வசனத்தை எழுத்தாளர் ராஜேஷ்குமார் எழுதுகிறார். ராதிகாவும் முக்கிய பாத்திரமேற்று நடிக்கிறார்.

"மண்ணுக்கேத்த ராகம்" என்ற நாட்டுப்புற இசைக் குழுவைச் சேர்ந்த கலைஞர்கள் இணைந்து உருவாக்கியுள்ள படம் "திருடு போகாத மனசு". படத்தில் இடம் பெறும் "கலையழகு..." என்ற பாடல் தமிழிலுள்ள மெய்யெழுத்துக்களைப் பயன்படுத்தாமல் எழுதப்பட்டுள்ளதாம்.

அழகிய தமிழ் மகன் படத்தையடுத்து, விஜய் இரட்டை வேடத்தில் நடித்து வரும் படம், ஏ.ஆர்.முருகதாஸின் கத்தி. கிளைமாக்சில், வில்லன் விஜய்க்கும், ஹீரோ விஜய்க்கும் இடையே நடக்கும் ஒரு அதிரடிச் சண்டை காட்சிக்காக ஹொலிவுட் ஸ்டன்ட் மாஸ்டர் ஒருவர், கோலிவுட்டுக்கு வருகிறார்.

அவதார் மற்றும் டின்டின் போன்ற ஹொலிவுட் படங்களைப் போன்று, இந்தியாவில் உருவாக்கப்பட்ட முதல் அனிமேஷன் படம், கோச்சடையான். இப்படத்தின் இயக்குநரான ரஜினியின் மகள் சௌந்தர்யாவுக்கு, "என்டி டிவி" நிறுவனத்தினர், மும்பையில் நடந்த ஒரு விழாவில், சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்துள்ளனர்.

தான் நடிக்கும் படங்களின் பாடல் வெளியீடு, விளம்பரத்துக்கான நிகழ்ச்சிகள் உட்பட எந்தவொரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதில்லை என்ற கொள்கையை அஜீத் கடைப்பிடித்து வருவது தெரிந்ததே. இப்போது நயன்தாராவும், தன்னிடம் இயக்குநர்கள் கதை சொல்ல வரும்போதே, இந்த நிபந்தனையை முன்வைக்கிறார்.

நயன்தாரா அனுஷ்காவுக்குப் பிறகு ஆர்யாவுடன் இப்போது கிசுகிசுக்கப்படும் நடிகை தமன்னா. இயக்குநர் ராஜேஸின் படத்தில் இருவரும் இணைந்து நடிப்பதையடுத்து, அவர்களுக்கிடையே நெருக்கம், நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், தமன்னாவை சென்னையில் பார்க்க முடியவில்லை என்றால், மும்பைக்கு பறந்துவிடுகிறாராம் ஆர்யா.

விஜய், காஜல் அகர்வால் நடித்த "ஜில்லா" படத்தை தயாரித்த நிறுவனம் புதிய படத்திற்கு ஜீவாவையும் காஜல் அகர்வாலையும் ஒப்பந்தம் செய்துள்ளனர். விஜய் படத்திற்குத் தந்ததை விட இப்படத்திற்கு கூடுதலாக, 10 இலட்சங்களை வெட்ட வேண்டும் என்று கேட்டுள்ளார் காஜல்.

நண்பேண்டா படத்திற்குப் பின், தான் நடிக்கும் படத்திற்கு காஜல் அகர்வாலை, ஒப்பந்தம் செய்ய இருந்த உதயநிதி, இப்போது,



லட்சுமி மேனனை ஒப்பந்தம் செய்துள்ளார்.

மாஸ்திஸாடே என்ற ஹிந்திப் படத்தில் சன்னிலியோன் பேசியிருக்கும், பச்சை வாழைப்பழ வசனம், மும்பையில் கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ரசிகர் மன்றம் அமைக்க கேட்டுவந்தவர்களை இதுவரை மறுத்துவந்த இளையராஜா, விரைவில் தன் மூத்த மகன் கார்த்திக் ராஜா தலைமையில், ரசிகர் மன்றம் திறக்கிறார். உலகமெங்கிலுமுள்ள தன் ரசிகர்களை ஒன்று திரட்டி, அந்த மன்றத்தில் இணைக்கும் இளையராஜா, அவர்களை சமூக நலனுக்காக, பயன்படுத்தப் போவதாக கூறுகிறார்.

தமிழ் பட வாய்ப்புகளை மறுத்துவந்த ஸ்ருதி, இப்போது வெங்கட் பிரபுவின் புதிய படத்தில் நடிக்கிறார். ஹீரோ சூர்யா என்பதால் நடிக்க ஒப்புக் கொண்டதாகக் கூறியுள்ளார். இதனிடையே ஹரியின் இயக்கத்தில் விஷால் ஜோடியாக "பூஜை" படத்தில் நடிக்கவும் ஒப்புதல் தெரிவித்துள்ளார்.



தமிழ் பேசத் தெரியாத நடிகைகளுக்கு, அதிக சம்பளம் கொடுக்கக் கூடாது என்று, தமிழ் படாதிபதிகளை கேட்டுக் கொண்டுள்ளார், நடிகர் ராதாரவி.

கோடிகளைக் கொட்டிக் கொடுப்பதாகச் சொல்லியும் ஒரு கார் விளம்பரத்தில் நடிக்க வந்த வாய்ப்பை மறுத்து விட்டார் அமீர்கான். "சத்யமேவ ஜெயதே நிகழ்ச்சி நடத்திய பின், எந்த பொருளுக்கும் விளம்பரம் செய்ய மனம் வரவில்லை. சமூக பிரச்சினைகள் சார்ந்த விளம்பரங்கள் என்றால் எப்போதும் நடிக்க தயார். பணம் கொடுத்துப் பெற முடியாத பல உணர்வுகளை சமூகத்தோடு ஏற்பட்டுள்ள சில அனுபவங்கள் எனக்குக் கொடுத்திருக்கின்றன. எல்லாவற்றிலும் போலி என்கிற நிலை உருவாகி விட்ட நிலையில், மக்களுக்கு அது குறித்த தெளிவை ஏற்படுத்த எந்த வகையிலாவது நானும் பிறரும் பங்கெடுக்க வேண்டும்" என டுவிட்டர் பக்கத்தில் .நெகிழ்ந்து பதிவு செய்திருக்கிறார் அமீர்கான்.

# மிதவாத தமிழ் அரசியல்வாதிகளுக்கு காத்திருக்கும் சுருக்குக் கயிறு!



ஏற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தம்மோடு இணைந்துகொள்ளுமாறு வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். ஆனால் முதலமைச்சர் அதனை நிராகரித்துள்ளார்.

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்பதானது இலங்கையின் மத்திய அரசாங்கத்திற்கும் வட மாகாண சபைக்கும் இடையே சிறந்த உறவு இருப்பதாக உலகுக்கு தவறானதோர் கருத்தை கொடுத்துவிடும் என்பதால் தாம் அந்த அழைப்பை ஏற்பதில்லை என்று வடமாகாண முதலமைச்சர் கூறியிருக்கிறார்.

இந்த பதில் சற்று சர்ச்சைக்குரியதாகும். இலங்கையின் மத்திய அரசாங்கத்திற்கும் வட மாகாண சபைக்கும் இடையே சிறந்த உறவு இருப்பதாக உலகுக்கு காட்டிக்கொள்வதால் ஏற்படப்போகும் நட்டம் என்ன? அல்லது மத்திய அரசாங்கத்திற்கும் வட மாகாண சபைக்கும் இடையே சிறந்த உறவு இல்லை என்று காட்டிக் கொள்வதில் ஏற்படப் போகும் நன்மை என்ன? என்று ஒருவர் கேட்கலாம்.

ஆனால், தற்போதைய நிலையில் முதலமைச்சர் இந்த முடிவை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார் என்றே தோன்றுகிறது.

அண்மைக் காலமாக வட பகுதியில் அரசியல்வாதிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் மட்டுமன்றி வட பகுதி மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலும் உறவு மோசமாகி வந்துள்ளது. அதிகார பரவலாக்கல் தொடர்பான விடயங்கள், பொது வாழ்க்கையில் தொடரும் இராணுவத்தின் தலையீடுகள், காணி அபகரிப்பு மற்றும் போரில் இறந்தவர்களை நினைவுகூரல் போன்ற பல விடயங்கள் அதற்குக் காரணமாக அமைந்தன.

அவற்றின் போது யார் சரி, யார் பிழை என்பது ஒரு புறமிருக்க, இவற்றால் வட பகுதி மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான உறவு மேலும் மோசமாகியது என்பதே உண்மையாகும். இந்த நிலையில் தாம் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று மோடியின் பதவிப்பிரமாண வைபவத்தில் கலந்துகொண்டால் அது தம்மை மக்களிடமிருந்து அந்நியப்படுத்திவிடலாம் என விக்னேஸ்வரன் நினைத்திருக்கக் கூடும். சிலவேளை அரசாங்கத்தின் நோக்கங்களில் ஒன்றாக அவ்வாறு அவரை அந்நியப்படுத்துவதும் இருந்திருக்கலாம்.

போர் முடிவடைந்தவுடன் இருந்ததைப் பார்க்கிலும் இப்போது வட பகுதியில் தமிழ் அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை அவதானிக்கலாம். குறிப்பாக அப்போது இருந்ததைப் பார்க்கிலும் இப்போது வட பகுதியில் தீவிரவாதம் மீண்டும் வளர்ந்துள்ளது. அரசியல் காரணங்களுக்காகவும் தேர்தல் வெற்றிக்காகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு புலிகளை பூஜித்தமையும் அரசாங்கம் தமிழ் மக்களின் கோரிக்கைகளை தொடர்ந்து அவமதிப்புச் செய்து வந்தமையுமே இதற்குக் காரணமாகும்.

இந்த நிலைமை தொடர்ந்தால் 1970களிலும் 1980களிலும் இடம்பெற்றதைப் போல் அந்தத் தீவிரவாதம் எதிர்காலத்தில் மிதவாத தமிழ் அரசியல்வாதிகளுக்கு சுருக்குக் கயிறாக மாறக்கூடும்.

இலங்கைத் தமிழ் அரசியலில் முதலமைச்சர் போன்ற மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் சிறியதோர் பனிப் போர் நடந்து வருவ்து பலருக்குத் தெரியும். அவர் முதலமைச்சர் வேட்பாளராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமையால் நியமிக்கப்பட்ட போதும் அவர் ஜனாதிபதியின் முன் முதலமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட போதும் இந்தப் பனிப்போர் ஓரளவுக்கு அம்பலத்துக்கு வந்தது. எனவே வட பகுதியில் தீவிரவாதம் மீண்டும் வளர்ந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியின் அழைப்பை அவர் ஏற்பது அவருக்கு கடினமானதாக இருந்திருக்கும்.

நாட்டில் இன நல்லிணக்கத்திற்கு அரசாங்கத்திற்கும் வட மாகாண சபைக்கும் இடையில் நல்லுறவு வளர்வது அத்தியாவசியமாகும். அந்த வகையில் வட பகுதியில் எழுந்த எதிர்ப்புகளை உதறித் தள்ளிவிட்டு விக்னேஸ்வரன் ஜனாதிபதி முன்னிலையில் முதலமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமை வரவேற்கத்தக்கதாகும்.

அதேபோல் முதலமைச்சர், ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று மோடியின் பதவிப்பிரமாண வைபவத்தில் கலந்துகொண்டிருக்க வேண்டும் என்று தென் பகுதியில் பலர் நினைக்கிறார்கள்.

ஆனால் விக்னேஸ்வரன், ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் இரு தரப்பினரினதும் நடவடிக்கைகள் காரணமாக வட மாகாண சபையும் மத்திய அரசாங்கமும் ஒன்றை யொன்று மென்மேலும் அந்நியப்படுத்திக் கொண்டன. எனவே முதலமைச்சர் மோடியின் பதவிப் பிரமாண வைபவத்தில் கலந்துகொள்வதில் அர்த்தம் இல்லை என்றும் சிலர் வாதிடலாம்.

உண்மையிலேயே, ஒரு புறம் மோடியும் ஒரு புறம் மஹிந்தவும் ஒரு புறம் தமிழக தலைவர்களும் மற்றொரு புறம் விக்னேஸ்வரனும் அவரவரது அரசியல் பிரசாரத்துக்காக இந்த சந்தர்ப்பத்தை பாவிக்கிறார்கள். அவ்வளவு தான்.

– எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.

# கல்விக்கோர் கருவூலமாக இருக்கும் யாழ். மண்ணில் வெளியீடுகளில் வெற்றி கண்டு வரும் கல்வியியற்கல்லூரி



**திரு.S அமிர்தலிங்கம்**

BSc (Hon),Dip in Ed, MSc in Applied Statistics, MSc Int. Management - ATI (Thailand), PGDM, PGDEM (Merit)

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி உயர் திரு. எஸ். அமிர்தலிங்கம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

2000ஆம் ஆண்டு உருவான யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 15ஆவது ஆண்டில் கால் பதித்துள்ளது. கல்விக்குத் தெய்வ உருவம் கொடுத்து தெய்வமாகப் போற்றுகின்ற மரபு தமிழர் மரபு. அவ்வகையில் கல்வியை வழங்கும் ஆசிரியர்களை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கடந்த 15 வருடங்களாக உருவாக்கி வருகின்றது.

எமது சமூகத்தின் இருப்பிற்கும் எதிர்கால நல்வாழ்விற்கும் முழு நிறைவான கல்வி இன்றியமையாதது. ஏனெனில் கல்வியினால் உருவாகும் மனித வளமே ஒரு சமுதாயத்தின், இனத்தின் பெறுமதி மிக்க வளமாகும். இக்கல்வியை பாடசாலைகளினூடாக வழங்கும் மிகப் பெரிய பொறுப்பு ஆசிரிய சமூகத்திடமே உள்ளது. இவ் ஆசிரியர்களை உரிய முறையில் பயிற்றுவித்து வழங்கும் பொறுப்பு எம்மிடம் வழங்கப்பட்டுள்ளது.

கல்விப் பிரச்சினைகளையும் தீர்வுகளையும் தேவைகளையும் இனம் கண்டு கொள்ளவும் அதன் மூலம் மாணவர்களும் சமூகமும் கல்வியின் இலக்குகளை அடைவதற்குச் சிறப்பான வதிவிடப்பயிற்சி பெற்ற ஆசிரியர்களினாலேயே காத்திரமான பங்களிப்பை ஏற்படுத்த முடியும். இதற்கு எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஏனைய எல்லாக் கல்லூரிகளுக்கும் முன்மாதிரியாகச் சமுதாயத்திற்கு பொருத்தமான பன்முக ஆற்றல்களைக் கொண்ட ஆசிரிய மாணவர்களை உருவாக்கி வருகின்றது. ஆரம்பக்கல்வி, விசேடகல்வி, விஞ்ஞானம், கணிதம், சங்கீதம், நடனம், நாடகம் ஆகிய பாடநெறிகள் தமிழ் மொழி மூலமும் நூலக விஞ்ஞானம், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடநெறிகளை ஆங்கில மொழி மூலமும் இங்கு தற்போது கற்பிக்கப்படுகின்றன. இங்கு பயின்று சிறந்த பயிற்சியைப் பெற்ற ஆசிரியர்கள் நாடு முழுவதும் அர்ப்பணிப்பான கல்விப்பணியை ஆற்றிவருகின்றார்கள்.

அவ்வகையில் தினமுரசு பத்திரிகையின் கல்விமுரசு என்ற பகுதியினூடாக எமது பிரதேச கல்வித்துறைசார் நிறுவனங்கள், பாடசாலைகளின் வரலாறுகளையும் அவற்றின் முக்கிய சேவைகளையும் வெளியிட்டு வருதல் பாராட்டுக்குரியதாகும். கல்வித்துறைக்கு நாம் முதன்மை கொடுத்தல் மிக முக்கியமானது. இதற்கு முன்னுதாரணமாக தினமுரசு பத்திரிகை செயலாற்றி வருவது போற்றுதலுக்குரியதாகும். இன்று எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பற்றிய மலர் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.



முத்தமிழ் விழாவில்....



கணிதம் தமிழ்மொழிமூலம் 2013 மாணவர்கள்



ஆரம்பப்பிரிவு A 2013 மாணவர்கள்



ஆரம்பப்பிரிவு B 2013 மாணவர்கள்



விஞ்ஞானம் தமிழ்மொழிமூலம் 2013



நாடகம் 2013 மாணவர்கள்



ஆங்கிலம் 2013 மாணவர்கள்



கணிதம் ஆங்கிலமொழிமூலம் 2013 மாணவர்கள்



நடனம் 2013 மாணவர்கள்




சங்கீதம் 2013 மாணவர்கள்




விசேட கற்கை நெறி 2013



விஞ்ஞானம் ஆங்கில மொழிமூல கற்கை -2013



கல்விசார் விரிவுரையாளர்கள்



கல்விசாரா ஊழியர்கள்

# உளசார் அமைதியை ஏற்படுத்துவதற்கு கலைகள் முக்கிய இடம்பெறுகின்றன

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் லலீசன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப மருத்துவத்துறை வளர்ச்சியடைந்துள்ள போதிலும் மருத்துவர்களால் உடல் நோய்களுக்குச் சிகிச்சையளிக்க முடிகிறதே தவிர உள்ரீதியான நோய்களுக்குச் சிகிச்சையளிக்க முடிவதில்லை கலைஞர்களால்தான் உளசார் அமைதியை ஏற்படுத்த முடியும். மனஅமைதியையும் மனநிறைவையும் ஏற்படுத்தும் வல்லமை கலைகளுக்கே உண்டு என கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தெரிவித்தார்.

சங்கமம் வயலின் கலையகம் நடாத்திய இரண்டாவது ஆண்டு நிறைவுவிழாவிற்கு தலைமை தாங்கி உரைநிகழ்த்தும்' போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்,


யாழ்ப்பாணத்தில் வயலின் இசைவல்லுர்கள் பலர் வாழ்ந்திருந்தாலும் அண்மைக்காலத்தில் இத்துறையில் கோலோச்சுபவர்கள் என்ற நிலையில் ஒரு சிலரையே அடையாளம் காட்ட முடிகிறது. இக்குறையைப் போககுவதற்கு 'சங்கமம் வயலின் வாத்தியக்கலையகம் " முயல்வது பாராட்டுக்குரியது.

எங்கள் மண்ணில் பக்கவாத்தியம் வாசிப்பதை ஜீவனோபாயத் தொழிலாகக்கொண்டு வாழமுடியாது. இதனை முழுமையாக உணர்ந்துகொண்டே பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வாத்தியக்கலைகளைப் பயிற்றுவிக்கின்றனர் என்றால் உளரீதியான அமைதியையும் ஆத்மார்த்த தேடலையும் வழங்கும் வல்லமை கலைகளுக்கு உண்டென்பதை அவர்கள உணர்ந்துள்ளார்கள்.

இதனை எல்லாம் பெற்றோரும் தெளிவாகப் புரிந்துகொண்டு தமது பிள்ளைகளுக்கு சாஸ்திரியக் கலையொன்றைப் பயிற்றுவிக்க முன்வரவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், வைத்திய நிபுணர்கள், கலையார்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (10)

# வற்றாப்பளை கண்ணகி ஆலயத்திற்கு ஆளுநர், நாமல் எம்.பி விஜயம்




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளை அருள்மிகு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தின் ஆரம்பநிகழ்வாக பாக்கு தண்டல் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல ராஜபக்ஷ· ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வாலயத்தின் பொங்கல் நிகழ்வு எதிர்வரும் 09ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் ஆலயத்திற்கு சென்றஇவர்கள் அங்கு சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.இதில் பிரதம குரு சிவகாந்த குருக்களால் பூஜைகள் நடாத்தப்பட்டன.

தொடர்ந்து ஆலய அபிவிருத்திகள் தொடர்பாகவும் ஆலய நிர்வாகத்திடம் இருந்து கேட்டறிந்ததோடு பொது நிர்வாக சபையும் அமைப்பதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (40)

வெள்ளி நற்சிந்தனை...



# நம்பினோர் கைவிடப்படார்

இறைவழிபாட்டில் ஈடுபடாமல் நாத்திகர்களாக இருப்பவர்கள் சர்வசம்பத்துடன் வாழ்கிறார்கள். சாத்திர சம்பிரதாயங்களின் நியதிப்படி இறைவ்ழிபாட்டில் ஈடுபட்டு எப்போதும் நல்லனவற்றைச சிந்திக்கும் ஆத்திகர்கள் பரம தரித்திரத்தில் கஷ்டப்படுகிறார்கள். தீயவர்கள் மகிழ்வுடன் இருககிறார்கள்: நல்லவர்கள் துன்பத்திற்கு ஆளாகிறார்கள். இறைவன் இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறானே? நியாயமான கேள்வி இது.

பெரிய புராணத்தில், சேக்கிழார் சுவாமிகள இதற்குப் பதில் சொல்லுகிறார். அயோக்கியர்களின் வசதியும் வாழ்க்கையும்;. மின்னலைப் போன்று சடுதியில் தோன்றி விரைந்து மறைந்து போய்விடக் கூடியது என்கிறார்.

ஆனால் பக்தர்களுக்கு என்ன தான் கஷ்டங்கள் வந்தாலும் அவர்கள் மனத்தளர்ச்சி அடைய மாட்டார்கள். ஏதோ நல்ல நோக்கத்துடன் கடவுள் இந்தச் சோதனைகளைத் தங்களுக்குத் தருவதாக எண்ணி, ஆறுதல் பெறுவார்கள் சோதனைகளின் விளைவாகக் கடவுள் தங்களைக் கைவிடமாட்டான் என்கிற நம்பிக்கையில் அவர்கள் இருக்கும் போது அவர்களுக்கு உற்ற துனபம் எல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல மறைந்து போகும் என்கிறார் தெய்வச் சேக்கிழார்.

பெரியபுராணத்தில் பேசப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களும் ஒன்பது தொகை அடியார்களும் இறைவனின் ஆன்மீகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டவர்களே ஆனால் இவர்கள் யாரும பரீட்சையில் தோல்வியடையவில்லை, காரணம் பரீட்சையை வைத்தவன் இறைவன் அல்லவா தன் அடியார்கள் தோற்றுப் போவதற்கு விட்டு விடுவானா?

வைணவப் பெரியாழ்வாருக்குச் சாத்திரங்களின் ஞானம் இல்லை. வேதங்களின் சாரத்தைச சொல்ல வேண்டும். என்கிற சவால் வரும் போது, இறைவனின் ஆணைக்குப் பணிந்து வேதங்களின் விழுமிய பொருளைச் சொல்லும் சவாலை அவர் ஏற்றுக் கொள்கிறார். இறைவனும் அவருக்குத் துணை இருந்து, அந்தச் சவாலை அவர் வெற்றி கொள்ளச் செய்கிறார்.

நம்பினோர் கைவிடப்படார்: இது நான்மறைத் தீர்ப்பு.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப்பட்டகம்

அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ கிஞ்சித்தேனும் விரும்பும் ஒருவன் – எக்காரணம் கொண்டும் அசட்டுத்தைரியமாக, பொதுப்புத்திவெளியில் இருக்கும் எந்தவொரு ஒரு தவற்றையும் சுட்டிக் காட்டவோ, அதனைக் களையவோ எத்தனிக்கவே கூடாது.

**– வில்லியம் தோம்ஸ்**

அதிகாரத்தில் இருப்பவர்களைத் தொழுவதும், அவர்கள் வழி ஒழுகுவதும், அப்பாவிகளைக் காட்டிக்கொடுத்து அதன் மூலம் சௌகரியங்களை அடைவதும் ஆன 'முள் இல்லாத பாதையில்' பத்திரமாக நடக்கப் பள்ளிக்கூடங்களே கற்றுக் கொடுத்தன.

**– பிரபஞ்சன்**

இரண்டு விஷயங்கள் மனிதர்களுக்கு ரொம்ப சுலபமானது. கூட்டதோடு கைதட்டுவது. கும்பலில் இருந்து கல் எறிவது.

**– யாரோ**

நீ எப்போதாவது பெரும்பான்மையின் பக்கம் நிற்க நேர்ந்தால், அப்போது யோசித்துப் பார் நீ என்ன தவறு செய்கிறாய் என.

**– மார்க் ட்வெய்ன்**

தப்பு அர்த்தம் வந்துவிடக் கூடாதென்று நினைப்பதால் நான் சொல்ல வந்ததைத் தெளிவாகச் சொல்ல முடியவில்லை. இந்த பூமியில் பிறந்தபின் தப்பிலேயிருந்துதான் தொடங்கணும். போராடத்தான் வேண்டும். வாழ்வைச் சிறுமைப்படுத்தும் இருளை விரட்டிக்கொண்டே இருக்க வேண்டும்.

**– யு.ஆர்.அனந்தமூர்த்தி**

வயதானவர்கள், வளர்ந்தவர்கள் எப்போதுமே எவற்றையும் தாங்களாகவே புரிந்துகொள்ள மாட்டார்கள் ஆக, குழந்தைகளுக்கு, எல்லா விஷயங்களையும், எப்பொழுதும் இவர்களுக்குத் திருப்பித் திருப்பிச் சொல்லி விளக்கிக் கொண்டிருப்பதில் ஒரே ஆயாசமாகவே இருக்கும்.

**– அந்த்வான் செந்த் எக்ஸ்பரி ('குட்டி இளவரசன்')**

ஒரு குரு உனக்குப் பல விஷயங்களைப் போதிக்கலாம். ஆனால் அவர் அவருடைய கண்களை உனக்கு அளிக்க முடியாது. உன்னைவிட அதிக அனுபவம் வாய்ந்தவராக அவர் இருக்கலாம். ஆனால் அவரால் அனுபவத்தை உனக்குக் கொடுக்க முடியாது. 'உன்னிடம் இருப்பதைத்தான் நீ பெறலாம்.

**– ஓஷோ**

பிறருக்காக என்ற அக்கறை முதலில் எழுவதில்லை; தனக்குப் பாதிப்பு என்ற ஓர்மையிலிருந்துதான் பிறருக்காகப் பாடுபடுதல் என்ற அரசியல் பிறக்கிறது. தனக்கு ஒரு பாதிப்புமில்லை, பாவம் பிறரை இரட்சிக்க வேண்டும் என்ற இரட்சணிய வேகம் உதவாது; அது 'பொய்யான' அடிப்படைகளிலிருந்து தோன்றுவது.

**– ராஜ்கௌதமன்**

நீங்கள் ஒரு சூடான அடுப்பின் மீது ஒரு விநாடியே கை வைத்தாலும் அது ஒரு மணி நேரம்போல் தோன்றும். ஆனால் நீங்கள் ஒரு அழகான பெண்ணுடன் பொழுது போக்கும்போது, ஒரு மணி நேரம் என்பது ஒரு விநாடியாகத் தோன்றும். இது தான் சார்பியல் கோட்பாட்டின் அடிப்படை!

**– அல்பேட் ஐன்ஸ்டீன்**

வீடு இருப்பது தெருவின் எந்தப் பக்கத்தில் – வலப்பக்கத்திலா, இடப்பக்கத்திலா இந்த கேள்விக்கு எடுத்த எடுப்பிலே பதிலளித்துவிட முடியாது. பாலத்திலிருந்து தோப்பை நோக்கி நடந்தீர்களானால், வீடு உங்களுக்கு இடப்பக்கத்திலிருக்கிறது. இப்படியில்லாமல் எதிர் திசையில் நடந்தீர்களேயானால், வீடு உங்களுக்கு வலப்பக்கத்திலிருக்கிறது. தெருவின் இடப்பக்கம் அல்லது வலப்பக்கம் என்பதாய்ச் சொல்லும் போது சார்பான திசையையும் நீங்கள் குறிப்பிட்டாக வேண்டும். ஆற்றின் வலக்கரை என்பதாய் சொல்வதில் பொருள் இருக்கிறது. ஏனெனில் ஆற்றின் நீரோட்டமானது திசையை நமக்குச் சொல்லி விடுகிறது. வாகனங்கள் சாலையில் வலப்பக்கத்தில் செல்வதாய் நாம் சொல்லலாம். ஏனெனில் வாகனத்தின் ஓட்டமானது திசையை நமக்கு தெரிவிக்கிறது. ஆகவே வலம், இடம் என்னும் கருத்துக்கள் சார்பானவை. இவற்றுக்கு சார்பான திசை குறிக்கப்படும் போது தான் இவற்றுக்கு பொருளுடையதாகிறது. அதுபோல இரவு, பகல் போன்றவையும், காட்சிப் பொருளின் கோணப் பரிமாணங்களால் தெரியும் பட வேறுபாடுகளும் சார்பியல் எதார்த்தமானவை. ஆக, நமது அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் கருத்துகளில் பலவும் சார்பானவை என்பதையும், பார்வையிடும் நிலைமைகளைக் குறிப்பிட்டு சொல்லும் போது மட்டுமே அவை பொருளுடையதாகிறது. காலமும், திசைவேகமும் கூட சார்பான எதார்த்தமே. இவ்வகையான புரிதல்களில் இருந்து தான் சார்பியல் எதார்த்தத்தை புரிய முடியும்.

**– எச். முஜீப் ரஹ்மான்**

# இலங்கையிலிருந்து நாடுகடத்தப்பட்டதில்
# இந்திய, பங்களாதேஷ் பிரஜைகள் முதலிடம்




(கொழும்பு)

இலங்கையில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்தவர்களில் இந்திய, பங்களாதேஷ் நாட்டவர்களே அதிகமெனவும் இந்த நாடுகளைச் சேர்ந்தவர்களே பெருமளவில் நாடு கடத்தப்பட்டுள்ளதாகவும் குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி கடந்த 2012 முதல் 2014 ஏப்ரல் வரை சட்டவிரோத வர்த்தகம் விசா முடிவடைந்த நிலையில் தங்கியிருந்த 708 இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதத்தில் மட்டும் 82 இந்தியப் பிரஜைகள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். இவர்களில் இந்திய மீனவர்களும் அடங்குகின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து 28 மாதங்கள் வரையான காலப்பகுதி வரை சட்டவிரோதமாக தங்கியிருந்த 1377 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 149 பேர் நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

அதுபோன்று கடந்த 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து ஏப்ரல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 101 பங்களாதேஷ் நாட்டவர்கள் நாடுகடத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு நாடுகடத்தப்பட்டவர்களில் சிலர் இலங்கையிலிருந்து அவுஸ்ரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்கு வந்தவர்களாக இருக்கலாமென சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத வியாபாரம் மற்றும் சுற்றுலா வீசாவில் வருகைதந்த பாகிஸ்தான் பிரஜைகள் 75 பேர் நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

மூன்றாவதாக தாய்வான் பிரஜைகள் 94 பேர் நாடுகடத்தப்பட்ட அதேவேளை சீனாவைச் சேர்ந்த 84 பேர் இவர்களில (16 பேர் இவ்வருடம்) நாடு கடத்தப்பட்டுள்ளனர். அதேபோன்று 46 ஆப்கான் பிரஜைகள், 39 நைஜீரியர்கள், 24 தாய்வான் பிரஜைகள், 22 ரைசியர்கள், 11 ஈரானியர்கள், 9 இஸ்ரேலியர்கள் மற்றும் 9 கொரிய பிரைஜைகளும் இந்தக் காலப் பகுதியில் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அதேபோன்று கடவுச் சீட்டை தொலைத்த 3 சிரிய பெண்கள் கையில் புத்தரின் படத்தை பச்சை குத்தியிருந்த பிரிட்டன் பெண் ஆகியோரும் நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

ஆபிரிக்க நாடுகளான அல்ஜீரியா, கமரூன், கொங்கோ கென்யா,மாலி. மொசாம்பிக்,சோமாலியா, மற்றும் லைபீரியாவைச் சேர்ந்த 64 பேர் நாடு கடத்தப்பட்டுள்ளனர். 20 சிரிய பிரஜைகள் கைது செய்யப்பட்டு குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் விசாரணையில் வைக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களின் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இவர்கள் அனைவரும் நாடுகடத்தப்படுவதில்லை. மாறாக இவர்களில் ஐம்பது வீதமானவர்களுக்கு விசாரணைகளின் போது உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தப்படுவதுடன் அவர்கள் கண்காணிக்கப்படுவதாக குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கடந்த 2012 தொடக்கம் 2014 ஏப்ரல் வரையான காலத்தில் 103 பிரிட்டன் பிரஜைகள் விசாரணைக்குட்படுத்தப்பட்ட போதிலும், நான்கு பேரே நாடு கடத்தப்பட்டதாகவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# விலங்குகளை கடத்திவந்த பெண்ணொருவர் கைது



(கொழும்பு)

சட்டவிதோரதமான முறையில் தாய்லாந்து பாங்கொக் நகரில் இருந்து இலங்கைக்கு விலங்குகள் மற்றும் பறவைகளைக் கடத்தி வந்த பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நேற்று முன்தினம் அதிகாலை இலங்கைக்கு வந்துள்ளார்.

குறித்த பெண்ணிடம் இருந்து 10 புறாக்கள், 6 முயல்கள், அரிய வகை பச்சோந்தி, 6 கிளிகள் மற்றும் இரண்டு லவ் பேட்ஸ் என்பன சுங்கப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த விலங்குகளை சூட்சுமமான முறையில் குறித்த பெண் இலங்கைக்கு கடத்தி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த் 36 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் குறித்த பெண் தாய்லாந்து சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.


# ஒலிகளை எழுப்புவதற்கு வாகனங்களுக்கு கட்டுப்பாடு

(கொழும்பு)

வாகன ஹோர்ன்களின் மூலம் எழுப்பப்படும் ஒலியை கட்டுப்படுத்த பொலிஸ் போக்குவரத்து பிரிவினர் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

ஹோர்ன்களை பயன்படுத்துவது, விபத்துகளை தவிர்ப்பதற்காகவும் மற்றொரு வாகனத்தை முந்திச் செல்லும் போது தேவையான இடத்தை பெற்றுக் கொள்வதற்காகவுமே பயன்படுத்த வேண்டும்.

எனினும் அடுத்த பஸ் வண்டி சாரதிக்கு வணக்கம் சொல்லவும நலம் விசாரிக்கவும் தரிப்பிடங்களில் புயணிகளை ஏற்றவும் மற்றைய வாகனத்தை விட தன்னிடம் ஒலி எழுப்பக் கூடிய ஹோர்ன் உள்ளது என்பதை காட்டுவதற்காகவே ஹோர்ன்



களை பயன்படுத்துகிறார்கள்.

பல்வேறு விதமான ஒலியை எழுப்பக்கூடிய, விதம் விதமான ஹோர்ன்களை பயன்படுத்துகிறார்கள். இனி அவ்வாறில்லாமல் அங்கீகரிக்கப்பட்ட 105 டெசிபல் அலகைக் தொண்டதாக ஒலி எழுப்ப வேண்டும் என்ற சட்டத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

## கைத்தொலைபேசிகளை பதிவு செய்யக் கோரிக்கை

கைத்தொலைபேசி பாவனையாளர்கள் தமக்கான தொடர்புகளை பெற்றுக்கொள்ளும் போது அவற்றை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கையின் தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. இந்தக் கோரிக்கை கைத்தொலைபேசி விற்பனையாளர்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளது.

இதுவரைக் காலமும் தமது தொலைபேசியை பதிவு செய்து கொள்ளாதவர்கள். 132 என்ற இலக்கத்தை அழுத்துவதன் மூலம் அவற்றைப் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் ஒழுங்கமைப்பு ஆணைக்குழு கேட்டுள்ளது. இந்தக் கோரிக்கை, தேவையற்ற குற்றச்செயல்களை தடுக்கவே விடுக்கப்பட்டுள்ளதாக ஒழுங்கமைப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# தேங்காய்எண்ணெய் உரிய தரத்தில் இல்லை

(கொழும்பு)

உணவு உற்பத்திக்கு பயன்படுத்துவதற்கு விற்பனை செய்யும் தேங்காய் எண்ணெய் வகைகள் உரிய தரத்தில் காணப்படவில்லை என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.


விற்பனை நிலையங்களில் பெறப்பட்ட எண்ணெய் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பெறப்பட்ட பெறுபேறுகளில் இந்த விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.எம்.ஏ.டக்ளஸ் குறிப்பிட்டார்.

12 வகையான எண்ணெய் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்திய போது அவற்றில் எட்டு வகையான எண்ணெய் வகைகளில் வேறு பொருட்கள் கலக்கப்பட்டுள்ளமை அறியக் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தரமான, நுகர்விற்கு பயன்படுத்தக்கூடிய தேங்காய் எண்ணையை மாத்திரம் உற்பத்தி செய்து விற்பனை செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெங்கு அபிவிருத்திச் சபையிடம் பணிப்பாளர் நாயகம் கேட்டுக் கொண்டுள்ளார்.



## பரமர் சங்கமம்



'புத்தியுள்ள புள்ளையெண்டாப் புறந்த வீட்டிலை சாகும்' எண்டால் புத்தியுள்ள பிள்ளைகளுக்கு வாழ்வே இல்லையா? இருப்பதெல்லாம் மொக்குப் பிள்ளைகளா?

பரமர் கொஞ்ச நேரமாகத் திக்குமுக்காடிப் போனார். பிறகு தான் ஒருவழியாகக் கண்டு பிடிக்க முடிஞ்சு அதாவது புத்தியுள்ளதுகள் தன்ரை வீட்டிலை இருக்கும் தாய், தேப்பன் சகோதரங்களோடை அப்படியொரு பிடிப்பா இருக்கும்.

தன்னிடம் வரக்கூடிய செல்வாக்குகளை அதுகளுக்குத் தான் குடுத்து அதுகளோடையே சாகும். அதைத்தான் அப்புடிச் சொல்லி இருக்கினம் இப்படித்தான் எங்கட இலக்கியப் பேர் வழிகளும் தங்க தங்க கூட்டத்துக்கை எல்லாத்தையும் பங்கிட்டு எடுத்திடுவினம்.

தமிழ்க் கதைஞர் வட்டம் தகவம் என்னும் குறுகிய பெயரோடை பெரிய விசாலமான பணிகளை எழுபதுகளில் இருந்து செய்து வந்தது. கொழும்பில் முதன்முதலாக ஆரம்பமான இலக்கிய மதிப்பீட்டுப் பணியை மேற்கொண்ட அமைப்பு இது.

வானொலி அண்ணா, வானொலி மாமாவாக இருந்த வ.இராசையா மாஸ்ரரும் இன்னும் சில இலக்கிய சுவைஞர்களாலும் இயக்கப்பட்டு வந்தது. கருத்தரங்குகள் வெளிவரும் நூல்களின் ஆய்வரங்குகளுடன் இலங்கையில் இருந்து வெளிவருகின்ற வெளிப்பாடுகளில் பிரசுரம் பெறும் சிறுகதைகளை மதிப்பீடு செய்து பரிசுகளும் வழங்கியது.

கனகாலம் உயிரற்றுப் போயிருந்த தகவம் கடந்த வாரம் திடீரென விழித்துக் கொண்டது போன்று 2012 ஆம்–2013 ஆம் ஆண்டுகளுக்குரிய தெரிவுகளை அறிவித்திருக்கிறது. வ.இராசையாவின் புத்திரி வசந்தி தயாபரனால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதால் தந்தையின் பணியை மகள் தொடர்வதை வரவேற்க வேண்டும்.

அதேவேளை அச்செயலில் காணப்பட்ட குறைபாடுகளையும் சுட்டிக்காட்டத்தானை வேண்டும். இரண்டாண்டுகளிலும் ஒரு நபரே நான்கு பரிசுகளுக்குத் தெரிவாகி இருக்கிறார். இதில் 2012 இல் ஒன்றும் 2013 இல் மூன்றும் அடங்கும்.

அதேபோல் இன்னொருவர் 2013 இல் ஒரே காலாண்டில் முதலாம் இரண்டாம் இடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இன்னொரு நபரும் இரண்டாம் காலாண்டு நான்காம் காலாண்டுகளுக்காக இரு தடவைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


அவ்வாறே 2012 இல் மூன்றாம் காலாண்டில் முதல் பரிசும் நான்காம் காலாண்டில் முதலாம் மூன்றாம் பரிசுகளும் 2013 இல் மூன்றாம் காலாண்டில் மூன்றாம் பரிசும் வழங்கப்படவில்லை எண்டால் தகுதியான கதைகள் வரவில்ல எண்டதுதானே!

பொதுவாக இதனையும் ஒரு போட்டிக்களமாகவே பாக்க வேண்டும். போட்டிகளில் ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகளுக்குத் தெரிவாவதில்லை ஊக்குவிப்புக்காக நடாத்தப்படும் எந்தக் காரியமும் ஒருதலைப்பட்சமாக அமையக்கூடாது அவ்வப் போது பரிசுகள் வழங்கப்படாமல் கடைப்பிடித்த இவர்களால் அதனையேன் செய்ய முடியவில்லை.?

இன்னொரு புறம்பாத்தால் ஊக்குவிப்பில்லாமல் காயடிப்பது போலில்லையா? போட்டிக்கு வந்த கதைகளில் ஒருவருக்கே தெரிவில் வருமானால் அடுத்துள்ளவரைப் போடுவதுதான் முறைமை. பாராட்டப்பட வேண்டியவை பல்லுக்குத்துக்கு இடமாவது நல்லதே.


'புத்தியுள்ள புள்ளை புறந்த வீடாக நாட்டேம் எண்ணி நாட்டுக்காவும் சாகவேணும்' என்ன நான் சொல்லுறே...

31)




(i) 5
(ii) 7
(iii) 9


32)




(i) 15
(ii) 17
(iii) 19


முதலுருவை ஒத்த உரு எது.

33)




(i) (ii) (iii)

34)




(i) (ii) (iii)

35)



(i) (ii) (iii)

36) புள்ளிகோட்டில் வரவேண்டிய விடையின் கீழ் கோடிடுக.



..............................

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014


பகுதி - I
1 மணி 15 நிமி



# கல்வி முரசு


A இல் உள்ள அனைத்து பொருளுமுள்ள கூட்டத்தின் கீழ் கோடுக. (சென்றவாரத் தொடர்ச்சி....)

14)




(A) (i) (ii) (iii)

15)




(A) (i) (ii) (iii)

16)




(A) (i) (ii) (iii)

17)




(A) (i) (ii) (iii)

18)



(A) (i) (ii) (iii)


19)



(A) (i) (ii) (iii)


புள்ளிக்கோட்டில் வரவேண்டிய விடையின் கீழ் கோடிடுக.

20)



(i) (ii) (iii) --- ----

21)




(i) (ii) (iii) ------------------------

புள்ளிக்கோட்டில் வரும் விடையின் கீழ் கோடிடுக.

22) 301, 402, 503, 604, 705, -----  (i) 606  (ii) 806  (iii) 906


23)




(i) 45  (ii) 55  (iii) 44




24.





(i) 30  (ii) 10  (iii) 20

25.





(i) 20  (ii) 15  (iii) 10

26.





(i) 8  (ii) 15  (iii) 6

27.





(i) 15
(ii) 3
(iii) 2

28.





(i) 180
(ii) 5
(iii) 10

29.




(i) 12
(ii) 16
(iii) 18

30.




(i) 26
(ii) 28
(iii) 32



யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் இணைந்து நடத்திய 'தமிழ்க்கவிதை மரபும் மாற்றமும்' என்ற தொனிப்பொருளில் அமைந்த கவிதைப் பட்டறை அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் க.வேல்நம்பி உரையாற்றுவதையும், கல்வியாளர்கள் அமர்ந்திருப்பதையும், கலந்துகொண்டவர்களையும் காணலாம். (48)

# வறுமை ஒழிப்புத்திட்டங்கள் மூலமே வன்முறைகளை கட்டுப்படுத்த முடியும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



(கிளிநொச்சி)

பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைகள், துஷ்பிரயோகங்களுக்கு வறுமையே அடிப்படை மூல காரணமாக காணப்படுகிறது. எனவே வெற்றிகரமான வறுமை ஒழிப்புத்திட்டங்களை கிளிநொச்சியில் நடைமுறைப்படுத்தப்படும் போதே, இவர்கள் மீதான வன்முறைகளையும் கட்டுப்படுத்த முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக நேற்று முன்தினம் கிளிநொச்சியில் சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சிறுவர் பெண்கள் பாதுகாப்பு, உரிமைகள் தொடர்பான ஒரு நாள் பயிற்சி செயலமர்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிகப்பெரும் யுத்தத்தின் இந்த மாவட்டத்திலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களின் நலன்களில் அதிக அக்கறை எடுக்க வேண்டிய தேவை இருக்கிறன.

இந்த மாவட்டத்திலேயே கிட்டத்தட்ட 5857 பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் இருக்கின்றது. இது இந்த மாவட்டத்தின் சனத்தொகையின் கிட்டத்தட்ட 15 சதவீதமானது. இதில் இயற்கையால் கணவனை இழந்தவர்கள், யுத்தத்தால் கணவனை இழந்தவர்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் என பலதரப்பட்டவர்கள் உள்ளனர். ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது இந்த எண்ணிக்கை இந்த மாவட்டத்தின் சனத்தொகையின் மிகப்பெரிய ஒரு வீதமாக இருக்கின்றது.

எனவே இன்றைய சிறுவர்களின் எதிர்காலம் தொடர்பான கரிசனையை நாங்கள் செலுத்த வேண்டிய பொறுப்பில் இருக்கின்றோம். 332 சிறுவர்கள் மாற்றுவலுவுள்ளோர்களாக இருக்கின்றார்கள். ஆகவே இங்கு சிறுவர்கள் பராமரிப்பு என்பது இலங்கையில் ஏனைய மாவட்டங்களைவிட இந்த மாவட்டத்திலேயே முக்கியமாக அவதானம் செலுத்த வேண்டிய விடயமாகும் என்றார்.

இந்நிகழ்வில் சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸகரலியத்த, அமைச்சின் செயலாளர் எரிக் இளையப் பராச்சி, கிளிநொச்சி மாவட்ட படைகளின் தளபதி சுகந்த ரணசிங்க, தேசிய பெண்கள் அமைப்பின் தலைவி கலாநிதி நீலா குணசேகர உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் மீள் பரீட்சை

வடக்கு மாகாணசபையில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் கடந்த 2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற பரீட்சையில் சித்திபெறத் தவறிய உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைதிறன்காண் மீள்பரீட்சை எதிர்வரும் யூன் மாதம் 22, 23 ஆம் திகதிகளில் வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சையில் முகாமைத்துவப் பாடத்திற்கான பாடத்திட்டமானது 31-07-2011 வரை அமுலில் இருந்துவந்த வடக்கு மாகாண சபையின் அபிவிருத்தி உதவியாளர் சேவைப் பிரமாணக்குறிப்பிற்கமைவாகவும் ஏனைய பாடங்களாகிய அலுவலக நிர்வாகமும் தாபனவிதிக்கோவையும் மற்றும் நிதிப்பிரமாணங்கள் எனும் பாடங்கள் தற்போது (01-08-2011 இல் இருந்து) வடக்கு மாகாண சபையில் அமுலில் இருந்துவரும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமையவும் இடம்பெறவுள்ளது.

எனவே உரிய பாடத்திட்டங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கருத்திற்கொண்டு பரீட்சார்த்திகள் பரீட்சைக்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்ற னர். (பரீட்சை வழிகாட்டி மற்றும் உசாத்துணை நூல்கள் என்பனவற்றினை உத்தியோகபூர்வ இணையதளமாகிய www.gsgunp.org இல் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (90)

# இணுவில் பொது நூலகத்தின் படிப்பக கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொது நூலகமும் சனசமூக நிலையமும் இணைந்த ஏற்பாட்டில் திருமதி. அன்னலட்சுமி சின்னராசா ஞாபகார்த்த படிப்பக கட்டத்திறப்புவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தலைவர் ச.சிவசங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக மறவன்புலவு கே.சச்சிதானந்தன், பொறியலாளர் சி.தயாபரன், வடக்குமாகாண மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் முத்து. இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை இணுவில் சிவஸ்ரீ வை.சோமஸ்கந்தகுருக்கள் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன். வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, யாழ். பல்கலைக்கழக ஆங்கில சிரேஷ்ட விரிவுரையாளரும் மொழிபெயர்ப்புக் கற்கை இணைப்பாளருமான கலாநிதி.க. ஸ்ரீகணேசன் யாழ். பரமேஸ்வராக் கல்லூரி அதிபர். ந.விஜயசுந்தரம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் சிறப்பு மலரும் வெளியிட்டுவைக்கப்படவுள்ளது. மலர் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்டவிரிவுரையாளர் ஈ.குமரன் வழங்கவுள்ளார்.

# கல்வியங்காடு வங்கியில் திடீரென ஒலித்த அபாய ஒலி

(திருநெல்வேலி)

கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள வங்கியொன்றிலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை 5.00 மணியளவில் திடீரென்று ஒலித்த அபாய ஒலிச் சத்தத்தினால் அப்பகுதியெங்கும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஒலி எழுப்பப்பட்ட நேரம் வங்கி பூட்டப்பட்டிருந்தது. இதனால் ஏதாவது விபரீதம் நடந்து விட்டதோ என எண்ணிய அயலவர்கள் சிலர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். கோப்பாய் பொலிஸாரும் விரைந்து வந்ததுடன் இராணுவத்தினரும் குவிந்தனர்.

வங்கி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து முகாமையாளரும் வந்து வங்கியைத் திறந்தபோது எந்த விபரீதமும் இடம்பெறாமல் வங்கி அமைதியாக இருப்பதைக் கண்டனர்.

அபாய ஒலி ஏற்பட்டமைக்கு சிறு தவறு ஒன்று காரணம் எனக் கண்டறியப்பட்டது. ஒலியின் ஓசையும் வங்கி அதிகாரிகளினால் நிறுத்தப்பட்டு பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியதுடன் குறிப்பிட்ட நேரத்துக்கு வங்கி திறக்கப்பட்டு பணிகளும் நடைபெற்றன. (137)








வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................


முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும் ..............................

பெற்றோர் கையொப்பம்

# பிலிப்பைன்ஸில் தீ விபத்து தாய் உட்பட 5 குழந்தைகள் பலி



பிலிப்பைன்ஸ் நாட்டின் மத்திய பகுதியில் டென்ட் சிட்டி என்ற இடத்தில் தற்காலிக குடியிருப்பில் திடீரென தீ விபத்து ஏற்பட்டதில் தாய் உட்பட 5 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் மத்திய பகுதியில் கடந்த ஆண்டு ஏற்பட்ட பயங்கர சூறாவளி காற்றில் பல வீடுகள் சேதம் அடைந்தன. இதில் வீடுகளை இழந்தவர்களுக்காக "சான்ஜோஸ் மாவட்டத்தில் டென்ட் சிட்டி என்ற இடத்தில் தற்காலிக குடியிருப்பு அமைத்து பலர் குடியிருந்து வருகிறார்கள்.

இங்குள்ள ஒரு கூடாரத்தில் நேற்றுமுன்தினம் திடீரென தீவிபத்து ஏற்பட்ட போது தீயணைப்பு வீரர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் தீயை அணைத்தனர். இருப்பினும் இந்த விபத்தில் ஒரு பெண்ணும், அவரது 5 குழந்தைகளும் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

கூடாரத்தில் வைத்திருந்த மண்ணெண்ணை விளக்கில் இருந்து தீப்பொறி பட்டு கூடாரத்தில் தீப்பிடித்து எரிந்ததாக மீட்புக் குழு அதிகாரி தெரிவித்தார்.

# விமான நிலைய குண்டு வீச்சில் உக்ரைனில் 100பேர் பலி



விமான நிலையத்தை கைப்பற்ற உக்ரைனில் இராணுவம் நடத்திய குண்டு வீச்சில் 100 பேர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைனின் கிழக்குப் பகுதியில் பெருமளவில இருக்கும் ரஷ்ய ஆதரவாளர்கள் இங்கும் தன்னாட்சி உரிமை வழங்க வேண்டும் என வலியுறுத்தி கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர். தனியாக படை அமைத்து இராணுவத்துடன் போரிட்டு வருகின்றனர்.

இந்நாட்டின் 2ஆவது மிகப்பெரிய டன்ட்ஸ்க் விமான நிலையத்தை கைப்பற்றி தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். இந்த நிலையில் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட பெட்ரோ போரோ சென்கோ போராட்டக்காரர்கள் மீது அதிரடித் தாக்குதல் நடத்த உத்தரவிட்டார்.

இதனால் போர் விமானங்கள், ஹெலிகொப்டர்கள் டன்ட்ஸ்க் விமான நிலையத்தில் பதுங்கியிருக்கும் போராட்டக்காரர்கள் மீது குண்டுகளை வீசி தாக்கியன. ரொக்கெட்டுகள் மற்றும் கையெறி குண்டுகளும் வீசப்பட்டன.

போராட்டக்காரர்களின் மறைவிட பகுதிகளில் 500 பரிசூட் வீரர்கள் தரை இறக்கப்பட்டனர். அவர்கள் ரஷ்ய ஆதரவாளர்களுடன் போரிட்டு தாக்குதல் நடத்தினர்.

அதில், போராட்டக்காரர்கள் மற்றும் பொது மக்கள் என 100இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். இந்த தகவலை டன்ட்ஸ்க் பிரதமர் அலெக்சாண்டர் போரோடல் தெரிவித்துள்ளதோடு அதே நேரத்தில் இராணுவ தரப்பில் சேதம் எதுவும் இல்லை என்றார்.

# மத்திய அமைச்சர்கள் தமது உறவினர்களை சிறப்பு அதிகாரிகளாக நியமிக்க முடியாது


## திடீர் அறிவிப்பு விடுத்தார் மோடி

(புதுடில்லி)

எந்தவொரு அமைச்சரும் உறவினர்களை தனிப்பட்ட அதிகாரிகளாக நியமிக்கத்தடை விதித்துள்ளதாக திடீர் அறிவிப்பு ஒன்றை பிரதமர் மோடி விடுத்துள்ளார்.

மத்திய அமைச்சர்கள் தங்களது உறவினர்களை தனிப்பட்ட அதிகாரிகளை, அந்தரங்க செயலாளர்களாக, சிறப்புப்பணி அதிகாரிகளாக நியமிப்பது வழக்கம். இதில் பிரதமர் தலையிடுவது இல்லை.

இந்த நிலையில், தற்போது பதவி ஏற்றுள்ள நரேந்திர மோடி தலைமையிலான பா. ஜனதா கூட்டணி அரசில் இப்படி ஒரு பிரச்சினை எழுவதற்கே வாய்ப்பு இல்லாத நிலை உருவாகி உள்ளது. பிரதமர் நரேந்திர மோடி, தனது அமைச்சரவை சகாக்களுக்கு தான் கையெழுத்திட்டு ஒரு அறிக்கை அனுப்பி உள்ளார். அதில் அவர் எந்தவொரு அமைசசரும் உறவினர்களை, தமது



தனிப்பட்ட அதிகாரிகளாக நியமிக்கத் தடை விதித்துள்ளார்.


அந்த அறிக்கையில், அமைச்சர்கள் தங்களது தனிப்பட்ட அதிகாரிகள் நியமனத்தில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை சுட்டிக்காட்டியுள்ளார். அந்த அறிக்கையின் மிக முக்கிய அம்சம், செயலாளர்களாக, இன்ன பிற அதிகாரிகளாக பொதுத்தொகுப்பில் இருந்து தான் நியமனங்கள் செய்யப்பட வேண்டும் எனக்கூறி இருப்பது தான்.

அமைச்சர்கள் தங்களது தனிப்பட்ட அதிகாரிகளை நியமனம் செய்வதில், பிரதமர் தலையிட்டு உத்தரவு பிறப்பித்திருப்பது இதுவே முதல் முறை. மேலும், அமைச்சர்கள் செலவினங்களை குறைக்க வேண்டும், மக்களுடன் நேரடி தொடர்பினை வைத்துக்கொள்ள வேணடும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

நாட்டு மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிப்படி, நரேந்திர மோடி ஊழலற்ற நிர்வாகத்தை அளிப்பதற்கான நடவடிக்கை இது என வர்ணிக்கப்படுகிறது.

உலகச் செய்திகள்

# மோடிக்கு நன்றி தெரிவித்தாள் பாகிஸ்தான் பிரதமரின் மகள்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் மகள், மரியம் ஷெரீப் நன்றி தெரிவித்துள்ளார்.

தன் பதவியேற்பு விழாவில் பங்கேற்ற பாகிஸ்தான் பிரதமர், நவாஸ் ஷெரீபிடம், அவர் தாய்க்கு, விலை உயர்ந்த போர்வையை பரிசாகக் கொடுத்து அனுப்பினார் இந்தியப் பிரதமர் மோடி.

இது குறித்து மரியம் ஷெரீப், 'டுவிட்டர்' சமூக வலைத்தளத்தில், மோடிக்கு நன்றி தெரிவித்துள்ளதோடு போர்வையின் புகைப்படத்தையும் வெளியிட்டு உள்ளார். பிரதமராக மோடி பதவியேற்ற விழாவில், நவாஸ் ஷெரீப் பங்கேற்றதற்கு, அவர் மகள் மரியம் முக்கிய பங்கு வகித்தார் என்று தெரிவிக்கப் படுகிறது.

# இரண்டு இலட்சம் குழந்தைகள் சோமாலியாவில் இறக்கும் அபாயம்

## – யுனிசெவ் எச்சரிக்கை

ஆபிரிக்க நாடான சோமாலியாவுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு வழங்கி வரும் நிதியுதவி குறைக்கப்பட்டுள்ளதால், இந்த ஆண்டில், இரண்டு இலட்சம் குழந்தைகள் இறக்கும் அபாயத்தில் உள்ளதாக 'யுனிசெவ' தெரிவித்துள்ளது.

உள்நாட்டு தீவிரவாதம், வறட்சி, வெள்ளம் போன்றவற்றால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டுள்ள சோமாலியாவில், 70 சதவீதம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு, ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒரு அங்கமான யுனிசெவ, உணவு வழங்கி வருகிறது.

முன்னைய ஆண்டுகள் போல் இல்லாமல், இந்த ஆண்டில், சோமாலியாவுக்கு மிகக் குறைந்த அளவே உணவு மற்றும் மருந்துப் பொருட்களுக்காக நிதி ஒதுக்கபட்டுள்ளதால், இந்த ஆண்டில் தட்டுப்பாடு ஏற்பட்டு, மருந்துகள், உணவுப்பொருட்கள் போதுமான அளவில் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவரை, 10 சதவீத நிதியே அளிக்கப்பட்டுள்ளதால், நிலைமை அங்கே மோசமாக



உள்ளது. இது குறித்து, சோமாலியாவில், யுனிசெவ் அமைப்பின் செய்தித் தொடர்பாளர், கிறிஸ்டோப் பவுலிரெக் கூறியதாவது,

உடனடியாக போதுமான நிதி கிடைக்காவிட்டால், பச்சிளம் குழந்தைகள், தாய்மார்கள் மற்றும் பெண்களுக்கு மருத்துவ உதவிகள், அத்தியாவசிய சத்துணவுகள் வழங்க முடியாத நிலை ஏற்படும். இதனால், இந்த ஆண்டில், இரண்டு இலட்சம் குழந்தைகள் பலியாகக் கூடும். ஏற்கனவே, 5 வயதுக்கு குறைந்த 50 ஆயிரம் குழந்தைகள் சத்துக் குறைபாட்டால் அவதிப்படுகின்றனர் என்றார்.

# நேரடியாக அமெரிக்கா மிரட்டப்படுமாயின் இராணுவ நடவடிக்கை மீண்டும் தொடரும்

## ஒபாமா தெரிவிப்பு

எதிர்வரும் காலங்களில் அமெரிக்கா நேரடியாக வன்முறையாளர்களால் மிரட்டப்படும் சந்தர்ப்பங்களில் மட்டுமே இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்தார்

இராணுவக் கலாசாலை இறுதியாண்டு மாணவர்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் நிகழ்த்திய உரையில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நாட்டினதும், மக்களினதும் பாதுகாப்புப் பாதிக்கப்படும் பட்சத்தில் மட்டுமே இராணுவம் சேவையில் அமர்த்தப்படுமென்றும் மற்றைய சகல உலக விவகாரங்களிலும் அமெரிக்கா தன் தோழமை நாடுகளோடு கலந்துரையாடிப் பிரச்சினையைச் சந்திக்குமென தெரிவித்தார்.

வெளிநாட்டுப் பிரச்சினைக்குத் தகுந்தவாறு மாறுபட்ட முறைகளான ராஜதந்திரம், அபிவிருத்திக்கான உதவிகள், பொருளாதாரத் தடையெனப் பலவகை கையாளப்படுமெனக் கூறியுள்ளார். பல தரப்பினரை உள்ளடக்கிய, அநேக புதிய போர் முறைகள் கையாளப்படும் இராணுவத் தாக்குதல்கள், மிகவும் முக்கிய சந்தர்ப்பங்களில் குறுகிய காலத்தில் தகுந்த பலனை அளிக்கக் கூடிய வகையில் நிச்சயம் வருங்காலங்களில் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வலி. மேற்கில் வீதிப்புனரமைப்பு; களநிலையில் தரவு சேகரிப்பு



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவது தொடர்பான அபிவிருத்தி செயறபாட்டிற்கமைய அமைச்சரின் ஒருங்கிணைப்பாளர் வி.கே. ஜெகன் கடந்த திங்களன்று வலி. மேற்கு சங்கானை கிழக்கு பகுதியை பார்வையிட்டார்.

[illegible] பல தசாப்தங்களாக புனர[illegible]க்கப்படாது மக்களுக்கு பெரும் துன்பங்களை கொடுத்து வந்த சங்கானை கிழக்கு சுரட்டிப்பனை அம்மன் கோயிலுக்கு செல்லும் மிக ஒடுங்கிய போக்குவரத்து பாதையை அகலித்து செப்பனிடும் முகமாக நேரில் சென்று பார்வையிட்டார். சிறப்பு மிக்க சுரட்டிப்பனை அம்மன் ஆலயம் அமைந்துள்ள இப பகுதியில் திருவிழா காலங்களில் இந்த வீதியூடாக ஆயிரக்கணக்கான மக்கள் தினம் தோறும் சென்று வரும்போது பெரும் துன்பங்களுக்கு ஆளாகிவரும் நிலையே நீண்ட காலமாக இருந்து வருகின்றது.

மேலும் நீண்ட காலமாக எவராலும் கண்டு கொள்ளப்படாது இருந்து வரும் வலிமேற்கு, வலிதென்கிழக்கு பகுதி எல்லையாக அமைந்துள்ள 200மீற்ரர் தூரமுள்ள சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பாடசாலைக்கு முன்பாக செல்லும் சேத்துப்பிடிச்சி வீதியையும் அமைசசரின் ஒருங்கிணைப்பாளர் வி.கே. ஜெகன் பார்வையிட்டார். இங்குள்ள மக்களின் போக்குவரத்து துன்பங்களை அறிந்து கொண்ட ஒருங்கிணைப்பாளர்,

இவ்வீதிகளை அமைச்சரின் விசேட கவனத்திற்கு கொண்டு சென்று மிக விரைவில் புனரமைத்து தருவதாக உறுதியளித்தார். நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் சென்றுவரும் இவ் வீதியானது புனரமைக்கப்படாது ஒதுக்கப்பட்டு வருவது இப்பகுதி மக்களை பெரிதும் பாதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இச சந்திப்பின் போது ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகனுடன் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் குமரசிங்கம் மற்றும் அப்பகுதி முக்கிய பிரதிநிதிகளும் சென்றிருந்தனர்.

## பிரதி அமைச்சர் சரத் சந்திரசிறி விபத்தில் காயம்

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதியமைச்சர் சரத் சந்திரசிறி முத்துகுமாரண நேற்றுக் காலை வாகன விபத்தொன்றில் சிக்கி அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ஹொரவபொத்தனை பிரதேசத்தில் வைபவம் ஒன்றில் கலந்து கொள்ள பிரதியமைச்சர் தனது வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தார்.

அவர் பயணித்த வாகனம் மிகிந்தலை பிரதேசத்தில் லொறி ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது. சம்பவத்தில் பிரதியமைச்சருக்கு சிறு காயம் ஏற்பட்டுள்ளதாக வைத்திய சாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## ஆளுமை விருத்திக்கு விசேட செயற்றிட்டம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் செயலகத்தின் ஏற்பாட்டில் சிறுவர்களின் ஆளுமை,ஆற்றல்களை விருத்தி செய்யும் நோக்குடன் யாழ். சிறுவர் பூங்காவில் சிறுவர்களுக்கான சாகசவிளையாட்டினை மேம்படுத்துவதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று யாழ் சிறுவர் பூங்காவில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்துகொண்டு சாகசவிளையாட்டின் ஆரம்பநிகழ்வினை ஆரம்பித்துவைத்தார்.இங்கு கருத்து தெரிவித்த வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி திறந்துவைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யவுள்ளதாகவும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜென்ரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.மேலும் யாழ் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு சாரணர்களும் இதில் உள்வாங்கப்பட வேண்டும் என் ஆளுநர் சுட்டிக் காட்டினார்.

பல்வேறு சாகசவிளையாட்டுக்களை சிறுவர்கள் பூங்காவில் குதூகலிக்கவேண்டும் என்ற நோக்குடன் இத்திட்டம் வடமாகாண ஆளுநர் செயலகத்தினால் முன்னேடுக்கப்பட்டிருக்கின்றன.

சூழலும் ராட்ணம்,கயிறில் நடத்தல்,சிறுவர்களுக்கான விநோத விளையாட்டுகள் என்பன இங்கு அமைக்கப்படவுள்ளது. இதற்கான 50மில்லியன் ரூபா செலவில் அமையப்பெறவுள்ளது.

யாழ் மாவட்ட சாரணர் அமைப்புத்தலைவர் ப.தேவரஞ்சன்,மற்றும் ஆளுநர் செயலகஉயர் அதிகாரிகள்,சாரணர்கள் பலரும் கலந்துகொண்டனர். (25)

### விபத்தில்...

இடம்பெற்றது. இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்த இரு பொலிஸார் மற்றும் பாடசாலை மாண்வியும் காயமடைந்தனர். காயமடைந்த மாண்வி அருகில் உள்ளவர்களின் உதவியுடன் உடனடியாக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். இவ்விபத்து பிரதான வீதியில் போக்குவரத்து விதிகளை மீறி முச்சக்கரவண்டி பயணித்தத[illegible] ஏற்பட்டதாக விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். பாடசாலை முடிவடையும் நேரத்தில் மிக வேகமாக வந்த போக்குவரத்து பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகலை ஏற்படுத்தியதை அவதானிக்கமுடிந்தது. விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (25)

### பிரதேச..

பட்டுள்ளதால், தேர்தல் திணைக்களத்தின் பதில் கிடைத்தவுடன், உறுப்பினர் பதவியில் இருந்து அவர் நீக்கப்படவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (25)

### இந்திய....

ஆண்டு இந்திய நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை தாங்கி இலங்கை வந்திருந்தார். அவரது இந்த விஜயத்தினால் இரு நாடுகளுக்கும் இடையிலான சம்பிரதாயபூர்வமான நட்பு மாத்திரமல்லாது பிணைப்புகள் உறுதியாகியது.

இந்தியாவின் புதிய வலுவான அரசாங்கம் தெற்காசியப் பிராந்தியத்தில் பொருளாதார முன்னேற்றம், ஸ்திரத்தன்மைக்கு காரணமாக அமையும்.

புத்த தர்மத்தின் பிறப்பிடமாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சமய தொடர்புகளும் மேலும் வளர்ச்சியடையும்.

பொருளாதாரம், சமூக அபிவிருத்தி, அமைதிக்காக இந்தியாவும் இலங்கையும் மேற்கொள்ளும் முயற்சிகள் பிராந்தியத்திற்கு மட்டுமல்லாது முழு உலகத்திற்கும் முக்கியமானது எனவும் அமைச்சர் பீரிஸ், சுஷ்மா சுவராஜிக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### இந்திய உறவை...

கொள்கைகள் மற்றும் ஏனைய விடயங்களை எடுத்துக் கொண்டால், அங்கு வலுவான மத்திய அரசு காணப்படுகின்றது. இதனால் கடந்த ஆட்சிக் காலங்களைப் போன்று மத்திய அரசாங்கத்துக்கு அழுத்தங்களை பிரயோகிக்க ஏனைய கட்சிகளால் முடியாது. இலங்கைக்குள் ஏதேனும் இன முரண்பாடு பிரச்சினைகள் காணப்படுமாயின், அது இலங்கை அரசாங்கத்தின் பிரச்சினையாகும். அது உள்ளக பிரச்சினையாகும். சர்வதேச நாடுகள் மற்றும் எமது அயல் நாடுகளின் கருத்துக்களுக்கு நாம் மதிப்பளிக்கின்றோம். ஆனால், எமது பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக்கொள்வோம் என்பதை மிக தெளிவாக புதுடில்லிக்கு கூறியுள்ளோம். இந்தி யாவில் ஏதேனும் பிரச்சினை காணப்படுமாயின், அதில் நாம் தலையிடுவதில்லை. ஏன் என்றால், அது எமக்குரிய விடயமல்ல.

நீங்கள் மத்திய அரசாங்கத்துடன் மாத்திரமா கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றீர்கள்? என்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது நிச்சயமாக மத்திய அரசாங்கத்துடன் மாத்திரமே, நாங்கள் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றோம் என்று அவர் பதிலளித்தார்.

### வடக்கில்...

அவர் மேலும் தெரிவிக்கையில், போக்குவரத்து சேவையானது மக்களின் அடிப்படை சேவைகளில் ஒன்றாகும். இதனை நன்குணர்ந்து கொண்டு துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும்.

இந்நிலையில், பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையிலும் இடையூறுகள் ஏற்படாத வகையிலும் போக்குவரத்து சேவைகள் துரிதமாகவும், இலகுவாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறான உத்தியோகத்தர்களது பொறுப்புணர்ந்த செயற்பாடுகள் ஊடாகவே பொதுமக்களுக்கான போக்குவரத்து சேவைகளை சிறப்பாகவும், திறம்படவும் மேற்கொள்ள முடியுமென்பது மட்டுமல்லாமல் அச்சேவைகளின் ஊடாக பொதுமக்கள் தமது தேவைகளை முழுமையாக பெற்றுக் கொள்ள முடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களைச் சேர்ந்த 7 தொழிற்சங்கங்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் அவை குறித்து நேரில் ஆராயவுள்ளதாகத் தெரிவித்ததுடன் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இதனிடையே குறித்த தொழிற்சங்கங்களது அலுவலக தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு அந்தந்த சாலைகளில் பிரத்தியேக அலுவலகங்களை அமைப்பதற்கு நடவடிக்கையினை முன்னெடுக்குமாறு தொலைபேசி வாயிலூடாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதான பிராந்திய முகாமையாளர் அஸ்ஹரிடம் அமைச்சர் பணிப்புரை விடுத்திருந்தார்.

இதன்போது அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரனும் உடனிருந்தார்.

### விசேட...

கையாள வேண்டிய விவகாரம் இது என அவர் கருதுகிறார். அதனால் நேரடியாகத் தமது பொறுப்பில் அதைக் கையாள்வது குறித்தும் அவர் சிந்திக்கிறார். உரிய சமயத்தில் அவர் முடிவு எடுப்பார். தனது நேரடிப் பிரதிநிதியாக ஒருவரை நியமித்து அவர் மூலம் இலங்கை விவகாரத்தைக் கையாள்வதே சரி என அவர் கருதுகிறார் என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன. முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும் நெருக்கடி சமயத்தில் இலங்கை விவகாரத்தைக் கையாள மூத்த இராஜதந்திரியான ஜி.பார்த்தசாரதியை நியமித்து, அவர் மூலம் நேரடியாக விடயங்களைக் கையாண்ட பாணியில் புதிய இந்தியப் பிரதமரும் செயற்பட எண்ணியுள்ளார் என அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அப்படி முடிவு எடுக்கப்பட்டால் அந்தப் பிரதிநிதியே இந்தியப் பிரதமரின் சார்பில் நேரடியாக இலங்கைக்கு வந்து இலங்கை அரசுத் தரப்புகளுடனும், ஜனாதிபதியுடனும், இலங்கை விவகாரத்தின் பங்காளித் தரப்புடனும் நேரடியாக ஊடாட்டம் கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை விவகாரத்தில் விரைந்தும், தெளிவாகவும், முடிவுகளை எடுப்பதற்கு இவ்வாறு விசேட பிரதிநிதி மூலம் அதனைக் கையாள்வதே பொருத்தமானது என பிரதமர் மோடி கருதுகின்றார் என்றும் கூறப்பட்டது.

### மலேசியாவில்..

ஆவணங்களும் புகைப்படங்களும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரிடம் உள்ளன.

இந்த சாட்சியங்கள் குசாந்தன் மாஸ்டர் புலிகள் அமைப்பின் முக்கியமான உறுப்பினர் என்பதை உறுதிப்படுத்துவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குசாந்தன் என்ற இந்த புலிகளின் விமானப் படை பிரதானி 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்டப் போரின் போது மலேசியாவிற்கு தப்பிச் சென்றவர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

விடுதலைப் புலிகள் அமைப்பில் குசாந்தன், குசாந்தன் மாஸ்டர் என அழைக்கப்பட்டார். எனினும் அவரது உண்மையான பெயர் சந்திரலிங்கம் குசாந்தன் எனவும் முல்லைச் செல்வம் என்ற பெயரிலும் அவர் அழைக்கப்பட்டதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

மலேசியாவில் இருந்து அழைத்து வரப்பட்டுள்ள குசாந்தன் உட்பட மூன்று புலிகளின் உறுப்பினர்களிடம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# உள்ளூராட்சி துணைவிதிகள் வலுவிழப்பு செயலிழக்கும் உள்ளூராட்சி சபைகள்

(யாழ்ப்பாணம்)

முப்பது வருடங்களின் பின்னர் வடக்கு மாகாணத்திற்கு உள்ளூராட்சி அமைச்சர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

எனினும் இதுவரை துணை விதி சட்டங்கள் உருவாக்கப்படவில்லை. உருவாக்கப்பட்ட சட்டங்களும் வலுப்பெறவில்லை. இதனால் வடக்கில் 34 உள்ளூராட்சி சபைகளும் செயலிழந்து பல இலட்சம் வருமான இழப்புடன் சபைகள் உள்ளன.

இவ்வாறு யாழ். ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்திற்கு நிதியில்லை என்கிறீர்கள், இருக்கின்ற சட்டங்கள் இதுவரை செயற்படவில்லை. உள்ளூராட்சி ஆணையாளர் இவ்விடயத்தில் கூடிய அக்கறை எடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் உப விதி சட்டங்கள் உருவாக்கப்பட்ட போதும் அவை பயனற்று இருந்தன.

ஏனெனில் உள்ளூராட்சி அமைச்சர் வடக்கிற்கு இல்லாமல் இருந்தது. தற்போது வடமாகாணத்திற்கு உள்ளூராட்சி அமைச்சர் பதவியேற்று 7 மாதங்கள் முடிவடைந்துள்ளன.

எனினும் உப விதிகளின் நிலைமை எந்தளவிற்கு உள்ளன என்பது குறித்து வடமாகாண அவைத்தலைவர் விளக்க வேண்டும் என்றார்.

இவ்விடயம் தொடர்பில் வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன், உள்ளூராட்சி ஆணையாளர், வலி. மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) ஆகியோரும் கருத்து வழங்கினர். (92)

## 64 வயது மூதாட்டியை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைச் சேர்ந்த மூதாட்டி ஒருவர் காணாமற்போயுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் உறவினர்களால் நேற்று முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஸ்ரெலா பிரான்சிஸ் (வயது - 64) என்ற இந்த மூதாட்டி கடந்த 27 ஆம் திகதி வெளியில் செல்வதாக கூறிச்சென்றதாகவும் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் உறவினர்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

# முறைதவறிய மீன்பிடி குடாக்கடலில் நால்வர் கை

(யாழ்ப்பாணம்)

தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி கடலில் மீன்பிடித்த நான்கு மீனவர்களைக் கைதுசெய்து யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

கொட்டடி, நாவாந்துறை ஆகிய பகுதிகளில் தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி கடலில் நேற்று மீன்பிடித்த இவர்களை நீரியல் வளத்துயைினர் கைதுசெய்து அன்றைய தினமே யாழ். நீதவான் நீதிமன்ற பொ.சிவகுமார் முன்னி ஆஜர்படுத்தியபோது தங்கூசி வலைகள் அை யும் அழிக்குமாறு நீதிபதி விட்டிருந்தார்.

இவ்வாறு நீரியல் வளத் யினரால் கைதுசெய்யப மூவர் நாவாந்துறைப் பகுதி சேர்ந்தவர்கள் என்றும் ம யவர் கொட்டடிப் பகுதி சேர்ந்தவர் என்பதும் குறிப தக்கது.

# மின்தடை பற்றிய அறிவித்த

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை குடத்தனை, நேடுக்குடத்தனை, பொற்பதி, குடத்தனை வடக்கு கடற்கரைப் பகுதி, மணற்காடு சந்தி, மணற்காடு வடக்கு, அம்மன், நுணாவில், வேம்பிராய், மட்டுவில், மந்துவில், சரசாலை, இராஜ வீதி, நிலாவரை, சிறுப்பிட்டி மேற்கு, நவக்கிரி, புத்தூர், எல்லாளன் வாசிகசாலையடி, வீரவாணி, ஊறணி, ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, செல்வநாயகபுரம், வாதரவத்தை, பொக்கணை, சந்நிதி வீதி, தோப்பு, கைத்தொழில்பேட்டை, குட்டியப் புலம், சுதந்திரபுரம், சுன் சிவன்கோவிலடி, சூராவ மலப்பை, மணில்ணி, ம காடு, ஏழாலை, குப்பிள கட்டுவன், காங்கேசன்துறை பாதுகாப்பு வலயம் ஆகிய களிலும்,

1.06.2014 ஞாயிற்றுக் காலை 8.30 மணியி மாலை 5.30 மணிவ பண்ணை, முடமாவடி, த வேலி, மருத்துவபீடப் பி கொக்குவில், பொற்பதி ஆடியபாதம் வீதி, GPS ஆகிய இடங்களிலும்,

5.06.2014 வியாழக்கிழ காலை 8.30 மணியிலிரு மாலை 5.30 மணிவரை செ தீவுப் பிரதேசத்தின் சில பகு ளிலும் மின் விநியோகம் தன பட்டிருக்கும்.

# அஞ்சலி செலுத்த அனுமதியில்லை; எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் என்ற பெயரை பாவிக்காது அனைத்து மக்களுக்காகவும் அஞ்சலி செலுத்துவோம். இல்லாவிடின் சபையில் அஞ்சலி செலுத்த வேண்டாமென யாழ். மாநகர சபை முதல்வர் கூறியதைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகரசபை உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

யாழ் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுக்காலை 10.30 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு அஞ்சலிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ராஜதேவன் அனுமதி வழங்குமாறு சபையில் முதல்வரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

இதற்கு சபை முதல்வர் முள்ளிவாய்க்கால் நினைவு அஞ்சலிக்கு அனுமதி வழங்க முடியாது எனவும் அல்பிரேட் துரையப்பா காலத்திலிருந்து உயிர்நீத்த அனைவருக்கும் நினைவஞ்சலியை அனுஷ்டிப்பதற்கு அனுமதி வழங்கப்படும் எனவும், நல்லூர் ஆலய முன்றலில் இதனை நடத்தலாம் எனவும் முதல்வரால் சபையில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சபையை விட்டு வெளிநடப்புச் செய்தனர்.

இதனால் கூட்டம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இல்லாமல் நடைபெற்றது.

அதேவேளை, மாதாந்தக் கூட்டத்திற்கான வருகைப் பதிவேட்டினை கையொப்பமிடாத எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்த பின்னர் மாதாந்த கூட்டத்திற்கு வருகை தந்தமைக்கான கையொப்பமிடுவதற்கு வருகைப் பதிவேட்டினை தருமாறு யாழ். மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதனிடம் கேட்டனர்.

அதன்போது ஆளும்கட்சி உறுப்பினர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். பின்னர் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட அனுமதித்ததுடன், அஞ்சலி செலுத்துவதாயின் அஞ்சலிக்கான பிரேரணையினை முதல்நாளே முதல்வருக்கு தெரியப்படுத்தியிருக்க வேண்டும், தெரியப்படுத்தியிருந்தால் அஞ்சலி செலுத்த அனுமதி வழங்கியிருக்க முடியுமென்றும் முதல்வர் சபையில் தெரிவித்தார். (25)

# நாடகமும் அரங்கியலும் மாணவர்களுக் பரீட்சை தயார்ப்படுத்தல் பயிற்சிமுகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்தினால் 2014 கா.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற நாடகமும் அரங்கிலும் பாட மாணவர்களுக்கான பரீட்சைக்கு தயார்படுத்தலுக்கான பாடமுகாம் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் அறிவித்துள்ளார்.

நாடகமும் அரங்கியலும் பரீட்சைக்கான மீட்டல் பயிற்சிமுகாமில் 2 ஆம் திகதி திங்கட்கிழமை எலிசபெத்காலம் அறிமுகம், ஒதெல்லோ, யூலிய சீசர் (அ.ரவீந்திரன் - ஆசிரியர் சென்ஜோன்ஸ் கல்லூரி), ஐரோகப்பிய நாடக வரலாறு 18, 19 ஆம் நூற்றாண்டு சுருக்கம், ஒரு பாவையின் விடு (வ.சிவகுமார் - ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), நடிப்புப்பயிற்சிகள் (திருமதி சந்திரிக்கா தர்மரட்ணம் - ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி), 3.06.2014 செவ்வாய்க்கிழமை இந்திய அரங்கும் நாட்டிய சாஸ்திரமும் (ரி.ஜெயசுதன் - ஆசிரியர் புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரி), நடிப்புக்கோட்பாடுகள் (செ.சுகந்தன் - ஆசிரியர் கனகரத்தினம் மகாவித்தியாலயம்), மரபு ஆடல் பாடல்கள் (ஜோன்சன் ராஜ்குமார் - ஆசிரியர் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலை), 4.06.2014 சீன, ஜப்பானிய நாடக மரபு (அ.ம.ரவீந்திரன் - ஆசிரியர் சென். ஜோன்ஸ் கல்லூரி), கிரேக்க நாடக வரலாறு மத்திய காலம் வரை, அன்ரிக்கனி, நடிப்புப் பயிற்சிகள் நாடக பாடங்களில் இருந்து (கை.திலகநாதன் - விரிவுரையாளர் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரி), 5.06.2014 வியாழக்கிழமை தமிழ்நாடக வரலாறு, இலங்கை நவீன நாடக வரலாறு, திருக்குற்றாலக்குறவஞ்சி (திருமதி சந்திரிக்கா தர்மரட்ணம் - ஆசிரியர் கொக்குவில் இந்துக்கல்லூரி), அபசுரம் (செ.சுகந்தன் - ஆசிரியர் கனகரத்தினம் மகா வித்தியாலயம்), நாடக எழுத்துருவும் நெறியாள்கையும் (எஸ்.ரி. குமரன் - ஆசிரியர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), 6.06.2014 வெள்ளிக்கிழமை ஈழத்து மரபுவழி நாடகங்கள், அலங்கார ரூபன். (ஜோன்சன் ராஜ்குமார் - ஆசிரியர் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மட ப சாலை), மரபுவழி ஆடல் பாட கள், வேடஉடை ஒப்பனை (வே இக்னேசியஸ் - ஆசிரியர் ( பக்றிஸ் கல்லூரி) ஆகிய நெறிகள் விரிவான விளக்க ளுடன் துறைசார்ந்த வளவா களினால் நடாத்தப்படவுள்ள

எனவே இவ் பாடமுகா 2014 ஆம் ஆண்டு கா.பொ உயர்தரப்பரீட்சைக்குத் தோற் கின்ற அனைத்து நாடக பா மாணவர்களையும் தவறாது க ந்து கொள்ளுமாறு வலயக்க விப்பணிப்பாளர் அறிவித்து ளார். (6

# புற்றுநோய் மருத்துவமனைக்கு புதிய கட்டடம் நிர்மாணிக்க ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நேற்று விஜயம் செய்தார். 650 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய கட்டடம் தொடர்பாகவும் துறைசார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியாலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றியும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, தெல்லிப்பளை புற்றுநோய் வைத்திய சாலையின் வைத்திய நிபுணர் இந்திக்ககுமாரவிடம் கேட்டறிந்து கொண்டார்.

அங்கு புற்றுநோய் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களுடனும் ஆளுநர் சிநேக பூர்வமாக கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா, வைத்தியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (25)

# சிறுவர்களுக்கு வங்கிக் கணக்



(கிளிநொச்சி)

யுத்த காலத்தில் இறந்த மற்றும் காணாமற்போன பெற்றோர்களின் ஒன்றியத்தினரால் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் தெரிவுசெய்யப்பட்ட 50 சிறுவர்களுக்கு வங்கிக் கணக்கு திறக்கப்பட்டு புத்தகங்கள் கையளிக்கப்பட்டன.

மாதாந்தம் இந்த 50 சிறுவர்களுக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் வங்யில் வைப்புச் செய்யப்படும். இந்த குறித்த சிறுவர்களின் 18 வயது பூர்த்தியடைந்த பின்னரே வங்கியிலிருந் மீளப் பெற முடியும்.

நேற்றுக் காலை இறந்த மற் றும் காணாமற்போன பெற்றோ களின் ஒன்றியத்தின் கிளிநொச் அலுவலகத்தில் அதன் கிளி நொச்சி இணைப்பாளர் கோபல் குணாலன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் ஒன்றியத்தின் கொழும்பு இணைப்பாள ஆனந்த ஜெயமால், வவுனிய இணைப்பாளர் சர்மா, மதகுரு மார்கள், சமூக ஆர்வலர்கள் எ பலர் கலந்துகொண்டனர். (29

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மே 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.